


நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


தினப்புயலில் சிறப்பு விளம்பரம்
விசேட விலைக் கழிவுடன் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
0778195947, 0776473692

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -152

## எரித்தெரியாவில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான்



## அமெரிக்க அரச பிரதிநிதிகளின் இலங்கைக்கான தொடர் விஜயங்களும், அதன் பெறுபேறுகளும்







## த.தே.கூட்டமைப்பிற்கு சகுனியான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரித்தெரியாவில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பொறுப்பாளர் பொட்டு அம்மான்



தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டு 06 ஆண்டுகளைக்கடந்து ஏழாவது ஆண்டினை அண்மித்திருக்கும் இந்நேரத்தில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பொறுப்பாளர் பொட்டு அம்மான் அவர்கள் எரித்தெரியாவில் தங்கியிருப்பது இலங்கை அரசிற்கு பெரும் நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. 30வருடகாலப் போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகளுடைய புலனாய்வுப் பிரிவானது அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாது, சர்வதேசத்திற்கும் சிம்மசொப்பணமாகத் திகழ்ந்தது. மாவிலாறில் ஆரம்பித்த யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது பொட்டு அம்மான் அவர்கள் இறுதிநேரத்தில் வலிந்த தாக்குதல் ஒன்றினை நடாத்தி முல்லைத்தீவுக் கடற்பரப்பில்வைத்து அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் அவரும் பலநூறு போராளிகளும் தப்பிச்சென்றுள்ளனர் என்கின்ற விடயம் 06ஆண்டுகளுக்குப் பின்னர் கசிந்துள்ளமையானது உலக வல்லரசுகள் மத்தியிலும் இலங்கையிலும் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மிகத்துல்லியமாகத் தாக்குதல்களை நடாத்தி அதில் வெற்றி கண்டவர் பொட்டு அம்மான். அதில் குறிப்பாக இலங்கை மத்தியவங்கி, கொலன்னாவ, சர்வதேச கட்டுநாயக்கா விமான நிலையம் போன்ற தாக்குதல்களும் உள்ளடக்கப்படும். இதில் விமான நிலை யத் தாக்குதலையடுத்தே விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் திரும்பியது. வடகிழக்குப் பகுதியில் 90 வீதமானநிலப்பரப்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதற்கு முக்கிய காரணம் பொட்டு அம்மான் அவர்களது புலனாய்வுக் கட்டமைப்பானது மிகவும் பலமாக இருந்தமையேயாகும். இவ்வாறிருக்க சமாதான பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும் இப்பேச்சுக்கள் அனைத்தும் தோல்வியடைய மீண்டும் இலங்கையில் 2005-2009 வரையான காலப்பகுதிகளில் யுத்தம் மீளவும் ஆரம்பித்தது.

சர்வதேசப் புலனாய்விற்கும், ஆயுத விநியோக செயற்பாட்டிற்கும் பொறுப்பாக விடுதலைப்புலிகளின் கேபி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் செயற்பட்டுவந்தார். அதே நேரம் மாவிலாறிலிருந்து விடுதலைப் புலிகளுக்கெதிராக யுத்தத்தை முடுக்கிவிட்டிருந்தது இலங்கையரசு. இதனால் படிப்படியாக ஆரம்பித்த போர் உக்கிரமடைந்திருந்த நிலையில் சர்வதேசத்திற்கு பொறுப்பாயிருந்த கேபியின் பதவி பறிக்கப்பட்டு பொட்டு அம்மானின் கைகளுக்கு இப்பதவிகள் மாற்றப்பட்டிருந்தது. சர்வதேசத்தின் வட்டாரங்களை முழுமையாக அறிந்திருந்த கேபி அவர்கள் புலனாய்வு செயற்பாடுகளில் இருந்து ஓரங்கட்டப்பட்டதால், அதன் பின்னர் இச்செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருந்த பொட்டு அம்மான் அவர்களால் புலனாய்வுக்கட்டமைப்பை சீராக இயக்கிக்கொள்ளமுடியவில்லை. காரணம் என்னவென்றால் சர்வதேச வட்டாரங்கள், அதனது தன்மைகள் தொடர்பாக நன்கு அறிந்தவர் தான் இந்தக் கேபி. ஆனால் பொட்டு அம்மான் அவ்வாறாக அறிந்திருக்கவில்லை. சோமாலியா, யூக்கஸ்லாவியா, செக் குடியரசு, தாய்லாந்து, எரித்தெரியா, கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்களை அனுப்பிவைத்தவரும் கேபியே. இலங்கையில் இருந்து பொட்டு அம்மான் அவர்கள் செயற்பட்டபோது விடுதலைப்புலிகளின் 08 ஆயுதக்கப்பல்கள் இலங்கை இராணுவத்தினரால் மூழ்கடிக்கப்பட்டது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளின் போராட்டம் பின்னடைவைக் கண்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சர்வதேச நாடுகள் அனைத்தும் இணைந்து விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவேண்டும் என்பதில் திடசங்கற்பம் பூண்டு அவர்களுடனான யுத்தம் தீவிரமாக கட்டவிழ்த்துவிடப்பட்டது. படிப்படியாக விடுதலைப்புலிகள் வசமிருந்த பகுதிகள் இராணுவத்தினரின் வசமானது. விடுதலைப்புலிகளின் புலனாய்வு காட்டிக்கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை நன்கு அறிந்த பொட்டு அம்மான் அவர்கள் தனது முக்கிய சகாக்களான ரொபின்சன், நியூட்டன், ரஞ்சன், வடிவேல், லக்ஷ்மன் போன்றோரின் உதவியுடன் புலனாய்வுக் கட்டமைப்பின் வியூகங்களை வேறுவிதமாக மாற்றியமைத்தார்.

ஏற்கனவே சர்வதேச புலனாய்வின் கட்டமைப்பில் பொட்டு அம்மானினது சகாக்கள் இருந்தமையின் காரணமாக இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் சர்வதேச கடற்பரப்பின் ஊடாக பலரை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்தனர். சர்வதேசத்தின் தலையீடுகளினால் எமது விடுதலைப்போராட்டம் முழுமையாக அழிக்கப்பட்டுவிடும் என்பதை அறிந்துகொண்ட பொட்டு அம்மான் இப்போராட்டத்திலிருந்து சற்று பின்வாங்கியதுடன், தமிழ் மக்களுக்கான தீர்வுகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெற்றுக்கொடுக்காவிட்டால்மீண்டுமொரு யுத்தத்தை சர்வதேசத்திலிருந்து ஆரம்பிப்பதே அவரின் திட்டமாகும்.

இதனை மையமாகக்கொண்டே வியூகங்களை வகுத்த பொட்டு அம்மான் அவர்கள் எரித்தெரியாவிற்குச் செல்வதான முடிவுகளை மேற்கொண்டார். விடுதலைப்புலிகள் தமது பாதுகாப்புக்கென 25 நிலக்கீழ் பதுங்குகுழிகளைத் தயார்படுத்தினர். இவற்றில் 03, 02, 01 என்ற முறைப்படியே தங்கியிருந்து உயிர்வாழமுடியும். இவற்றில் பெரும்பாலானவை கடல் பிரதேசங்களை அண்டியே அமைக்கப்பட்டது. அதன் சுரங்கப்பாதைகளும் சிறம்பம்சமாகும். இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்க கணிசமானளவு புலனாய்வுப் பிரிவினை [illegible] யேற்றிக்கொண்டிருந்தார் பொட்டு அம்மான்.

இறுதிநேரத்தில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தது. இதற்கான காரணம் என்னவென்றால் தொடர்பு சாதனத்தில் பேசுகின்ற இரகசிய குறியீடுகளை இராணுவம் ஒட்டுக்கேட்க ஆரம்பித்த நிலையிலேயே இவ்வுரையாடல்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தது. மிகவும் சாதுரியமான முறையில் தேசியத்தலைவர் பிரபாகரனையும் அவர் அழைத்துச்சென்றதாகக் கூறப்படுகின்றது. இவ்விடயம் உண்மைத் தன்மையற்றதாகவிருந்தாலும் பொட்டு அம்மான் அவர்கள் தப்பிச்செல்லும் அளவிற்கு வாய்ப்பிருந்ததாக இருந்தால் நிச்சயம் பிரபாகரனும் தப்பிச்சென்றமைக்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும் என்பதேயாகும். விடுதலைப்புலிகளின் ஆரம்பநிலை போராளியாக செயற்பட்ட பொட்டு அம்மான் அவர்கள் இப்போராட்டத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்.

இவருடைய திறமையான செயற்பாடுகளின் காரணமாகவே தேசியத்தலைவர் அவர்களினால் விடுதலைப்புலிகளின் புலனாய்வான டெசி என்ற பிரிவுக்கான பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டது. இறுதி யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, முள்ளிவாய்க்கால், பொக்கனை போன்ற பகுதிகளில் இராணுவத்தினருக்கு கணிசமானளவு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தி, அவரும் அவரது சகாக்களும் ஊடறுத்து சமர் ஒன்றினை மேற்கொண்டு இறுதியாக தப்பிச்சென்றனர். இது இவ்வாறிருக்க எரித்தெரியாவில் விடுதலைப்புலிகள் தங்கியிருப்பதற்கு அவ்வரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கின்றதா? என்கின்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. எரித்தெரியா நாடானது ஆயுதக் குழுக்களுக்கு அடைக்கலம் வழங்கும் ஒரு நாடாகவே திகழ்கின்றது. இங்கு சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியில் உள்ளவர்களும் தலைமறைவாக உள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே எரித்தெரியாவுடன் நெருங்கிய நட்புறவினை பேணி வந்ததன் காரணமாக அவர்களுடைய ஆயுத தொடர்புகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இறுதியாக இரணைமடுப் பகுதியில் விமானத் தாக்குதலை நடாத்துவதற்காக எரித்தெரியாவில் இருந்து புறப்படத் தயாராகவிருந்த மிக் ரக விமானங்களை இந்தியாவினது ரோ காட்டிக்கொடுத்ததன் விளைவாக அத்திட்டங்களும் கைவிடப்பட்டது.

இந்நிலையில் தேசியத்தலைவர் பிரபாகரனின் உடலைக் கண்டுபிடித்ததாகக் கூறும் இராணுவம் பொட்டு அம்மானின் உடலைக் கண்டுபிடிக்கவில்லை. ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் இந்த புலனாய்வுப் பிரிவினர். புலனாய்வுக் கட்டமைப்பிலுள்ளவர்கள் இலகுவில் யாராலும் இனங்காணப்படமாட்டார்கள். அவ்வாறே தமது நிலைகளை பலப்படுத்திக்கொண்டு செயற்படுவார்கள். ஆரம்பநிலைப் போராளியாக தேசியத் தலைவருடன் இணைந்து செயற்பட்டு வந்த பொட்டு அம்மான் அவர்கள் தேசியத்தலைவருக்கு அடுத்தநிலையில் வைத்துப்பார்க்கும் அளவுக்கு திறமையாகச் செயற்பட்டவர். நிச்சயமாக அவர் தப்பித்து எரித்தெரியாவிற்குச் சென்றிருக்கும் நிலையில் எவ்வாறான திட்டங்களுடனும்சென்றிருப்பார்என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இறுதி நேரத்தாக்குதல் திட்டம் அமைக்கப்பட்டது எவ்வாறு? பொட்டு அம்மான் அவர்கள் கரையான் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் தனது சகாக்களுடன் நிலைகொண்டிருந்தார். போதியளவு ஆயுதங்கள் இல்லாமையின் காரணமாக தம் கையிருப்பில் இருக்கக்கூடிய ஆயுதங்களைக்கொண்டு தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருந்த அவர் 53,57,58வது படைப்பிரிவுகளுடன் பாரிய எதிர்ப்புச் சமர் ஒன்றினை ஏற்படுத்தியிருந்தார். இதில் பலநூறு போராளிகள் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்திற்கும்மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுமிருந்தனர். இறுதி நேரத்தில் இலங்கை இராணுவத்தினருடன் இணைந்த சிலர் காட்டிக்கொடுக்கவும் ஆரம்பித்தனர். இதனையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்ட பொட்டு அம்மான் அவர்கள் தனது உடலில் வெடிமருந்துகளைக் கட்டிக்கொண்டு போர்க்களத்தில் நின்றார். 2009இன் 05ஆம் மாத ஆரம்பப் பகுதிகளில் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் இருவரையும் சர்வதேச நாடொன்றின் உதவியுடன் சரணடையுமாறு பணிக்கப்பட்டிருந்தவேளை அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த பொட்டு அம்மான் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் அல்லது அதற்கான மாற்றுவழிகளை ஏற்படுத்துவோம் எனவும் பதில் அனுப்பினார். ஏற்கனவே தேசியத்தலைவர் சரணடைய மறுப்பு தெரிவித்திருந்தமையின் காரணமாக தனதுநிலைப்பாட்டினை மாற்றிக்கொண்ட பொட்டு அம்மான் அவர்கள் இங்கிருந்து தமது ஆயுத நிலைகளை பலப்படுத்தாது விட்டால் தற்கொலைப்படைகளாக மாறுவதே அவர்களது திட்டமாக இருந்தது. இலங்கைத்தீவிலிருந்து வேறு நாட்டிற்கு தப்பிச்செல்லும் வியூகங்கள் ஏற்கனவே பொட்டு அம்மானால்ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது சாத்தியமற்றுப்போனால் கரும்புலிகளாக வெடித்துச்சிதறுவதுமே இவர்களது முக்கியத்திட்டம்.

ஏற்கனவே விடுதலைப்புலிகளது நீர்மூழ்கிப் கப்பல்கள் 03 தயாராக இருந்த நிலையில் சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவும் இவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. அமெரிக்காவின் நயவஞ்சகத்தனத்தை அறிந்துகொண்ட பொட்டு அம்மான் அவர்கள் தமது தன்னிச்சையான முடிவினை எடுத்துக்கொண்டார். ஏற்கனவே எரித்தெரியாவில் விடுதலைப்புலிகளின் இரகசியமான முகாம்கள் இருந்தமைக்கான ஆதாரங்களும் உள்ளன. இவை ஒருபுறமிருக்க அவ்வாறு விடுதலைப்புலிகள் எரித்தெரியாவில் இருந்தால் இத்தனை காலங்களில் ஏன் அவர்கள் மீண்டும் இலங்கை வந்திருக்கக்கூடாது என்கின்ற கேள்வியும் எழுகின்றது. அரசியல் ரீதியில் சமரச தீர்விற்கான முன்னெடுப்புக்களை கொண்டுசெல்லும் இக்காலகட்டத்தில் திடீரென்று ஒரு போராட்டத்தை ஆரம்பித்துவிட்டால் அதுதமிழ்மக்களுக்கு பாதகத்தன்மையைத் தோற்றுவிக்கும். ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் அனைத்துத் தோல்வியடைந்ததுடன், விடுதலைப் புலிகளின் போராட்டம் இன்னமும் இருக்கின்றது எனக்கூறி ஒரு இன அழிப்பினை மேற்கொண்டனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படக்கூடாது என்கின்ற காரணத்தினால் பொட்டு அம்மான் அவர்கள் மிக நிதானத்துடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுக்கான சரியான தீர்வுகள் எட்டப்படாதபோது அடுத்தகட்ட நகர்வுகள் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் அவர்களால் எவ்வாறு காய்நகர்த்தப்படும். எவ்வாறிருப்பனும் மைத்திரி-ரணிலினது கூட்டரசு எதிர்வரும் காலங்களில் பல்வேறு விதமான சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமைகள் இருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

இரணியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மண் குதிரைகளை நம்பி தமிழினம் ஏமாறக்கூடாது

இலங்கையின் வரலாற்றினைப் புரட்டிப்பார்த்தால் சிங்கள பெரும்பான்மை ஆட்சியாளர்களாலும். தமிழ்த் தலைவர்களாலும் தமிழினம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்ததும் வருகின்றதுமே வரலாறாகப் பதியப்பட்டிருக்கின்றது. ஆரம்பகாலங்களில் ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்தனர். தமிழ் மக்களுக்கான உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டிருந்தது. பலர் தாக்குதல்களுக்குள்ளாகி இறப்புக்களைச் சந்தித்ததும். உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் உள்ளானார்கள். தேர்தல் காலங்கள் என வரும்பொழுது மாத்திரம் மக்கள் மத்தியில் தோன்றி தமது பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதனை வழக்கமாக்கிக்கொண்டுள்ளனர். பெரும்பான்மைச் சமூகமாக இலங்கையில் வாழும் சிங்கள அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் பெரும் பங்கு வகிக்கின்றனர். இவர்களால் சிறுபான்மையினத்தவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வந்தவண்ணமுள்ளனர். இவர்களிடமிருந்து தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இன்றுவரை போராட்டப்பாதையில் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு முக்கிய காரணம் பெரும்பான்மையினருக்குள் இருக்கும் இனவாத சக்திகளே எனலாம்.

இவர்களைப் போன்றதான பாணியினையே தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளும் கையாளத்தொடங்கியுள்ளனர் என்பதுதான் ஜீரணிக்கமுடியாத உண்மை. தமிழினம் சிங்கள இனவாதிகளால் ஏமாற்றப்படுவது ஒருபுறமிருக்க. தமிழ் அரசியல்வாதிகளாலும் ஏமாற்றப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக இவர்களில் சிலர் அரசின் அடிவருடிகளாகச் செயற்படுவதே இதற்கு முக்கிய காரணம். தேர்தல் காலங்கள் என வரும்பொழுது மாத்திரம் தமிழ் மக்களின் உரிமைகள். போராட்டம். தமிழ்த்தேசியம். சுயநிர்ணயம் என்றெல்லாம் மேடைபோட்டு வாய்கிழியப்பேசுபவர்களாக இன்று மக்களால் இவர்கள் சித்தரிக்கப்படும் அதேவேளை வெறுமனே அரசியலில் இலாபம் தேடுபவர்களாக, தமது பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதில் முனைப்புடன் செயற்படுபவர்களாக, இன்று சிலர் மாற்றம் பெற்றுள்ளதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான த.தே.கூட்டமைப்பிற்கும். வடமாகாணசபைக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. இதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதோடு இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அரசு திட்டம் வகுத்து அதனைச் செயற்படுத்தியும் வருகின்றது. மேலும் அண்மையில் யாழில் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். தமிழரசு கட்சியின் உப தலைவர் சீ.கே.சிற்றம்பலம். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன். தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். வடமாகாணசபை உறுப்பினரும் புளொட் அமைப்பினை சேர்ந்தவருமான க.சிவநேசன் உள்ளிட்ட அரசியல்வாதிகள். சமயவாதிகள். மருத்துவர்கள் என 30பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் த.தே.கூட்டமைப்பின் வடமாகாணசபையின் முதலமைச்சர் கலந்துகொண்டமையே. இவரை நம்பி ஏனையவர்களும் இவர் பின்னே படையெடுப்பது என்பது மண்குதிரையினை நம்பி பயணிப்பது போன்றதாக அமைந்துள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய கருணாவினால் இதுவரை அரசியலில் எதனைச்சாதிக்க முடிந்தது. அவ்வாறானதொரு நிலைமையே இந்த தமிழ் பேரவைக்கும் உருவாகும். ஏற்கனவே தமிழ் மக்கள் சார்பில் இருக்கக்கூடிய தமிழ்க்கட்சிகள் ஒருபுறமிருக்க. புதிதாக இன்னுமொரு பகுதியினர் இவ்வாறானதொரு அமைப்பினை உருவாக்கியிருப்பதும் இதனால் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கப்பெறுமா என்பதும் கேள்விக்குறியே. இதனை தமிழ் மக்கள் பிரித்தறிந்துகொண்டு தமது அரசியல் பாதையினை வகுத்துக்கொள்வது சிறந்ததாக அமையும்.

**76**

ஆகவே நான்காவது பக்கத்தையும் மூடிவிட்டால் அனைத்து விநியோகங்களையும் நிறுத்தி உள்ளே நிற்கும் எம்மை அப்படியே நசுக்கிவிடலாம் என்ற திட்டத்துடன்தான் எழுதுமட்டுவாள், ஆனையிறவு என இருபுற நீரேரிக் கரையாலும் ராங்கிகள், பவள்கள் சகிதம் முன்னேறத் தொடங்கினார்கள். ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சி இத்தாவில் Boxஇல்தான் தங்கியுள்ளது என்பது அதற்குள் நின்ற அனைவருக்கும் தெரிந்த

"யசோ லீமாசேரா, யசோ லீமா சேரா" என அழைத்தவாறு சண்டை தொடங்கிய நீரேரிப் பகுதியை நோக்கி வேகமாகச் சென்றார் லக்சனா. எனினும் யசோதினியின் தொடர்பு கிடைக்காமலேயே போனது. நாகர்கோயிற் பகுதியில் தனித்து நின்று அவர் படையினருக்குக் கொடுத்த அடி நினைவில் வந்துபோனது. தாக்குதலின் ஆரம்பமே ராங்கிகளினதும், பவள்களினதும் நகர்வாக இருந்ததால் வெவ்வேறு பகுதியில் நின்ற RPG போராளிகள் நீரேரிப் பகுதியைநோக்கி ஓடிவந்து

சுடுகின்ற சூடுகளைவிடக் குறிபார்த்துச் சுடுகின்ற ஒரே ஒரு சூடு அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதுபோல கேணல் பால்ராஜ் சொன்ன அந்த செய்தி இத்தாவில் போர்க்களத்தின் மகத்தான வெற்றிக்குக் காரணமான வீரர்களுக்கு ஊக்க மாத்திரையாக இருந்தது. எல்லா நிலைகளிலுமே எமக்கும், படைத்தரப்புக்கும் இடையே கடும் தாக்குதல் நிகழ, இராணுவம் பற்றைகளினூடாகப் புகுந்து உள்ளே சென்றதுடன், முன்னணியிலும் ஆங்காங்கே நிலையெடுத்து எமது உதவியணியை மறிக்கக் காத்திருந்தது.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



விடயம். இராணுவத்தின் இப்படியானதோர் திட்டத்தை எதிர்பார்த்திருந்த தளபதிகள் துருப்புக்களை உள்ளே விடக்கூடாது என்பதனைக்கருத்திற்கொண்டு முன்னணிப் போராளிகளுக்குக் கட்டளை வழங்கினர். எல்லா ஆயுதங்களும் நெருப்பாகின.

இத்தனைக்கும் தாக்குதல் ஆரம்பிக்கின்ற அந்தக் கணத்தில் தளபதிகள் அனைவரும் கேணல் பால்ராஜின் கட்டளை மையத்தில் தாக்குதல் பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத்தினுள்ளேயே அவர்கள் தத்தம் பீடங்களில் இருந்தவாறு தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராகினர். மாலதி படையணிப் போராளிகள் நின்ற பகுதியிலேயே ஆரம்பத் தாக்குதல் தொடங்கி, தொடர்ந்து அதுவே அன்றைய களமாகிப்போனதால் நேரடியாகவே விதுஷாவின் கட்டளைகள் அலைவரிசையை நிரப்பிக்கொண்டிருந்தன.

பயிற்சிகள் முடிவடையும்வேளையில் எம்மைச் சந்தித்த தலைவர் அவர்கள், "இந்தத் தாக்குதலில் எதிரியின் மிகப்பெரிய சவாலை நீங்கள் எதிர்கொள்வீர்கள். அந்த நேரத்திலும் தளராமல் உறுதியோடு நின்று சண்டையிடவேண்டும். உங்களை அனுப்புவது நிறையச் சாதிப்பதன்மூலம் இந்தச் சமரை வெற்றிகொள்வதற்குத் தான்" என்று சொல்லியிருந்தார். தலைவர் எங்களோடு கதைத்தது, நாங்கள் பயிற்சி எடுத்தது, இவ்வளவு காலமும் மக்கள் பட்ட துன்பம் என எல்லாம் ஒரு கணநேரத்துள் வந்துபோனது.

தூரத்தில் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்த ராங்கிகளின் உறுமல் ஒலி சற்று நேரத்தில் குறைந்து, வெடியோசைகள் கேட்கத்தொடங்கின. ராங்கிகள் அண்மிக்கத் தொடங்கிவிட்டதை அச்சத்தங்கள் உணர்த்தின. நெரிசல் பற்றைகளை முறித்துக்கொண்டு வந்த ராங்கிகள் முன்னணி நிலையைக் கடக்கத் தொடங்கின. ராங்கி எதிர்ப்பு ஆயுதம் ஏதுமின்றித் தனியே துப்பாக்கியை மட்டும் வைத்துத் தாக்குதலைச்செய்த போராளிகளைக்கடந்துஒன்று, இரண்டு, மூன்றுஎன உள்ளே போயின. அவை மிதித்துச் சென்ற பாதைவழியே தாக்கியபடி முன்னேறிய படையினரை. ஒவ்வொருவரும் தத்தமது காப்பரண்களில் நின்றபடியே தாக்கி நகரவிடாது தடுத்தனர். இவர்களின் வெடிபொருட்கள் தீர்ந்து விழிமூடும்வரை படையினரின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. இந்தக் கடும் எதிர்ப்பு, படையினருக்கு சினத்தைக் கொடுத்திருக்கவேண்டும். மிகப்பலமாக எறிகணைத் தாக்குதல் செய்யத்தொடங்கினர். இப்போது நீரேரிக் கரைப்பக்கமாக ஐந்து காப்பரண்களில் 200மீ தூர இடைவெளிகளில் நின்ற போராளிகளின் தொடர்பின்றிப் போனதுடன், எழுதுமட்டுவாள் பக்க நீரேரிக் கரையிலிருந்தும் படையினரின் 'வலிச்சக்கர' புறப்படத் தொடங்கியிருந்தது.

சேரவும், பெரும்பாலான ராங்கிகள் உள்ளே கடந்துவிடவும் சரியாக இருந்தது. உள்ளேயே சில தாக்குதலுக்குள்ளாகின. இவ்வாறு நகர்ந்த கவச ஊர்திகளைத் தாக்குவதற்காகப் பற்றைகளுக்குள்ளால் நகர்ந்துகொண்டிருந்த முல்லை நிலாவிடம் இப்போது ஒரேயொரு ராங்கியெதிர்ப்பு எறிகணைமட்டுமே இருந்தது. அதனை செலுத்தியில்பூட்டியபடிநகர்ந்தவர்தனக்கு முன்னே தெரிந்த பெரிய பற்றையைக் கண்டுவிட்டார். சூழலைவிடச் சற்று வித்தியாசமாகத் தெரிந்த அது ராங்கிதான் என்பதை இனங்காண நீண்டநேரம் தேவைப்படவில்லை. ஆயுதம் அவரது தோளிலேறியது. பெரும் ஓசையுடன் எறிகணை செல்லவும் ராங்கி செயலிழந்து நின்றது. அதேநேரம் அருகில் நின்ற பற்றையைக் கவனிக்கத் தவறிவிட்டார். அதுவும் அவர்களின் ராங்கி. அதிலிருந்து ஒருவர் குதித்தபோதுதான் இவர் அதனைக் கண்டார். குதித்த படைவீரர் முல்லைநிலாவின் சேட்கொலரை இழுத்துப்பிடிக்க, தன்னிரு கைகளாலும் அனைத்தும் பிடித்திருந்த ஆயுதத்தை அப்படியே உயர்த்தி அடித்தார். இதனைச் சிறிதும் எதிர்பாராத அவர் தடுமாறி விலகியதுதான் தாமதம், முல்லைநிலா தன் ஆயுதத்துடன் நீரேரிக் கரையைநோக்கி ஓடினார். அடர்ந்துசெறிந்து இருந்த கண்டற் பற்றையினுள் தன்னை மறைத்துக்கொண்டு நடப்பதை அவதானித்தார்.

இதேநேரத்தில், "ராங்கிகள் வந்தால் பிரச்சினையில்லை. பின்னால வாற துருப்புகளை மட்டும் உள்ள விடக்கூடாது. அவையளைத்தான் சுட்டுச்சுட்டு விழுத்தவேணும். துருப்புகள் இல்லாம ராங்கி வந்து பிரயோசனமில்ல. இதுகளுக்கு உள்ளுக்கு வைச்சுக் கொடுக்கலாம். ஒரு புலி இதுக்குள்ள இருக்கும் மட்டும் படையை உள்ளுக்குள் விடக்கூடாது. எல்லோரும் குறிபார்த்துப் பார்த்துச் சுடுங்கோ. மிச்சத்தை நாங்கள் பார்க்கிறம்" என்ற கேணல் பால்ராஜின் உறுதியான, தன்னம்பிக்கையான குரல் எல்லோருக்கும் புத்துணர்வூட்டியது. எல்லோரது தொலைத்தொடர்புக் கருவிகள் [illegible] உள்வாங்கி வெளியே [illegible] எழுந்தமானத்துக்குச்

எங்குமே அடர்பற்றைகளாக இருந்ததால் தூரத்திலேயே அவர்களை அவதானிக்க முடியாதிருந்தது. அதேபோல எமது பதுங்குகுழிகளையும் அவதானிப்பது கடினமானதுதான். இருதரப்பினரது ஒலிகளையும் பிரித்தறியவும் முடியாதிருந்தது. எல்லா நிலைகளிலும் ஓரிருவரேனும் நின்று தாக்கினர். எனினும் நிலைமையைச் சொல்லமுடியாதபடி படையினர் அண்மையில் வந்துவிட்டிருந்தனர். அல்லது நடைபேசி செயலிழந்திருந்தது. சுட்டுக்கொண்டிருந்த ஆயுதத்தில் இயங்குநிலைத் தடை ஏற்பட்டதும், அருகில் தோழிகளின் உதிரத்தில் தோய்ந்த துப்பாக்கிகளே மீண்டும் பகையினைச் சுட்டன.

நிலைமை இவ்வாறிருக்க, வேகமாக நகர்ந்த மேஜர் லக்சனாவைச் சீறிவந்த ரவைகள் தடுத்தன. அப்போதுதான் இராணுவம் அதுவரை முன்னேறிவிட்டதை உணர்ந்து அதிலேயே பதில் தாக்குதலைச் செய்தார். அவருக்கென்ற அந்த ரவைகள் காத்திருந்தன போலும். சன்னங்கள் அவர் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. ஒரு தாய்போல நின்று போராளிகளைக் கவனித்து வழிநடத்திய லக்சனாவை இழந்த சோகம் எல்லோரிடமும் பரவ முதல், மேஜர் அமுதாவும் அவ்விடத்திலேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். 1990இலிருந்து மருத்துவப் பிரிவில் பணியாற்றிய இவர் சில மாதங்களுக்கு முன்னர்தான் மாலதி படையணியில் இணைந்திருந்தார்.

சிறுகுளம் ஒன்றுக்கு அருகேயிருந்த கனரக ஆயுத நிலையில் நின்ற மேஜர் அரசி, முன்னேறிச் சென்ற லக்சனாவின் தொடர்பு இல்லை என்பதையும், தமக்கு முன்னேயும் தாக்குதல் நடைபெறுவதாயும் தர்சாவுக்கு அறிவித்தார். தர்சா ஒவ்வொரு நிலைமையையும் விதுஷாவுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் தொலைத்தொடர்புக் கருவியூடாக நேரேயே கேட்டுக்கொண்டிருந்ததுடன் உடனே நிலைமையை மதிப்பிட்ட விதுஷா, உடைக்கப்பட்ட பகுதியை நோக்கி முன்னேறும்படி தர்சாவைப் பணித்தார்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 483. | 2ஆம்.லெப்.குணாளினி | பன்னீர்ச்செல்வி கணேஸ் | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 484. | 2ஆம்.லெப்.அகரவள்ளி | மனோகரி இராமச்சந்திரன் | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 485. | 2ஆம்.லெப்.காவியா | சந்திரகுமாரி இராமச்சந்திரன் | வவுனியா | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 486. | 2ஆம்.லெப்.தீபா | ஜெயலட்சுமி இராசு | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 487. | 2ஆம்.லெப்.பொன்முடி | சாந்தினி பழனியாண்டி | கண்டி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 488. | 2ஆம்.லெப்.[illegible] | [illegible] | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 489. | 2ஆம்.லெப்.[illegible] | [illegible] | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரச பிரதிநிதிகளின் இலங்கைக்கான தொடர் விஜயங்களும் அதன் பெறுபேறுகளும்



அண்மைக்காலமாக அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகள் இலங்கைக்கு ஒருவர் பின் இன்னொருவராக விஜயம் செய்துவருவது தெரிந்ததே. என்றைக்கு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய கைவசமாயிருந்த ஆட்சியதிகாரம் மைத்திரி-ரணில் தரப்பினருக்குக் கைமாற்றப்பட்டதோ அன்றிலிருந்தே இப்பிரதிநிதிகளின் இலங்கை வருகை அசாதாரணமாக அதிகரித்துமுள்ளது. இவர்கள் இலங்கைத் தீவுக்கு அதுவும் ஐ.தே.கவின் ஆட்சியதிகாரம் இடம்பெற்றிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்வதோடு வடக்குக்-கிழக்குத் தமிழர் தரப்பின் அரசியல் பிரதிநிதிகளான சம்பந்தன், சுவாமிநாதன், திருமதி.மகேஸ்வரன் ஆகியோரையும் மலையகத் தமிழ் மக்களின் முன்னணி அரசியல் பிரமுகர்களான மனோகணேசன் போன்றவர்களையும், இஸ்லாமிய முன்னணி அரசியல் பிரமுகர்களான ரவூப் ஹக்கீம் முதலானோர்களையும் சந்தித்து ஆரவாரப்படுத்துவதும் வழக்கமானவொன்றாக அமைந்தும் உள்ளது. இவ்வமெரிக்கப் பிரதிநிதிகள் சிறுபான்மையான அரசியல் தலைவர்களைச் சந்தித்து முக்கியத்துவம் வழங்குவதால் தமிழ் மக்கள் உட்படச் சிறுபான்மை இனங்கள் அவர்கள் தமக்கு விமோசனத்தைப் பெற்றுத்தரப்போகின்றார்கள் என எண்ணுவதும் இயல்பானவொன்றாக இருக்கின்றது. ஆனால் புதிய உலகமயமாக்கல் என்னும் அகிலத்தில் வதியும் அனைத்து மக்களினதும் விரோதம் மிக்க கோட்பாட்டைத் தன்னகத்தே மிகக் கெட்டியாக இறுகப்பற்றிப்பிடித்து உலகம் முழுவதையுமே தனது ஏகாதிபத்தியக் கோரப்பசிக்குத் தீனியாக்கத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும் அமெரிக்க அரச பிரதிநிதிகள் தமது தேசத்தின் இப்பெறுமதிமிக்க நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான இராஜதந்திரக் காய்நகர்த்தல்களைத் தவிர்த்துக்கொண்டு தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களென எண்சாண் உடம்புக்குப் பிரதானியாக விளங்கும் சிரமானது முழுமையாகப் பிசகி நிற்பவர்களுங் கூடக்கருதமாட்டார்கள்.

ஆனால் தமிழ்பேசும் மக்களின் காவலர்களாகத் தங்களை இனங்காட்டிக்கொண்டிருக்கும் சம்பந்தன் போன்றவர்களும், அரசின் அடிவருடிகளான தமிழ் அமைச்சர்களும் இலங்கை தேசத்துக்கு அடிக்கடி விஜயம் செய்துகொண்டிருக்கும் அடக்குமுறை ஒடுக்குமுறையிலேயே ஆயுட்காலச் சுகங்காணும் அமெரிக்க அரசின் பிரதிநிதிகளுக்கு ஆலவட்டம், கொடிபிடித்து ஆர்ப்பரித்து நிற்பதும் அப்பிரதிநிதிகள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதோ தீர்த்துவைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்களெனத் தாரை, தப்பட்டைகளுடன் தமிழ் மக்களை நம்பவைக்க முயல்வதும் அவர்களுடைய அசாதாரணமான அரசியல் வங்குரோத்துத்தனத்தைத் தான் பிரதிபலித்து நிற்கின்றது.

தோளில் கலப்பைகளுடனும், மண்வெட்டிகளோடும் கோவணங்கள் சகிதமாக இத்தேசத்திற்குச் சோறு போடும் விவசாயப் பெருங்குடிமக்கள் தலைநகர் கொழும்பில் அணி அணியாகத் திரண்டுவந்து மைத்திரி-ரணில் அரசின் புதிய வரவு-செலவுத் திட்டம் தமது வயிற்றிலும் தம்மை நம்பியிருப்போரின் வயிற்றிலும் பேரிடியாக அடிக்கவிருப்பதாக அவ்வரவு-செலவுத் திட்டத்திற்குத் தமது பாரிய எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் இன்றைய அரசியல் பின்புலத்தில் கோட்சூட் அணிந்து இலங்கைக்கு வருகை தரும் தமிழர் மீதான கொழும்பு அரசுகளின் அடக்குமுறைகளுக்கு ஆயுட்கால அனுசரணையாளர்களாக விளங்கும் அமெரிக்கப் பிரதிநிதிகளோடு தாமும் அதேபாணியிலேயே கோட்சூட் அணிந்து கூடிக்குலவிக் கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்களின் தலைவர்களுடன் கூறப்படும், அரசியல் மக்களின் தலைவர்களெனக் கூறப்படும் அரசியலாளர்களின் உண்மையான இயல்பையும் அமெரிக்கப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான தொடர் விஜயத்தின் நிஜமான நோக்கத்தையும் ஆணிவேறு அக்குவேறாக அம்பலப்படுத்தித் தேசத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இப்பிரதிநிதிகளின் வருகையும் அவர்களோடு இங்குள்ள சிறுபான்மையின அரசியல் தலைவர்களெனப்படுவோரின் கள்ளக் காதலும் பாரிய ஆபத்தாகவே முடியுமெனத் தெளிவுபடுத்துவது தேசபக்தர்களினதும், தமிழ் உணர்வாளர்களினதும் உடனடிக் கடமையாகவும் இருக்கவேண்டும்.

இனி அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகளோடு கள்ளக்காதல் கொண்டுள்ள சம்பந்தன், சுவாமிநாதன், விஜயகலா மகேஸ்வரன், மனோகணேசன், முஜிபர் ரஹ்மான், ரவூப் ஹக்கீம் ஆகியவர்களுடைய தனிப்பட்ட அரசியல் வர்க்க நலன்களையும், அவர்களுடைய கட்சிகளின் பெயர்களிலேயே உள்ள கருத்தற்ற குளறுபடிகளையும், தேர்தல்களின்போது இப்பாவஜென்மங்கள் போட்டியிடும் சின்னங்கள் உள்ளார்த்தங்களையும் உற்றுநோக்கி விலாவாரியாக ஆய்வு செய்து மிக விரைவில் அமெரிக்க ஏகாதிபத்தியவல்லாதிக்கசக்திகளினால் இலங்கைத் தீவுக்கும், அத்தீவில் வதியும் தமிழ்பேசும் மக்களுக்கும் வரவிருக்கும் பாரிய ஆபத்தைத்தடுத்து நிறுத்தவும் வேண்டும்.

முதலில் இவ்வாண்டின் தைத்திங்களில் இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு வாக்களிக்கும் படியும் ஐ.தே.கவின் ஆட்சியதிகாரமானது தமிழ் மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக இருக்குமெனவும் சிறையிருந்த மாவையார் உட்பட இலங்கைத் தமிழரசுக்கட்சியினால் மிகவும் வினயமுடன் வேண்டிக்கொண்டதை எடுத்துநோக்குவோம். தமிழரசுக் கட்சியினரின் வேண்டுதலை ஏற்று வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் மைத்திரிக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கியமையும் அதன் தொடர்ச்சியாக மாவை சேனாதிராஜா அவர்கள் எமது வேண்டுதலையேற்று, தமிழ் மக்கள் வாக்களித்தமையால் ஜனாதிபதியாகியுள்ள மைத்திரி அவர்கள் நன்றிக்கடனாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பாரெனக் சிரிப்புக்கிடமான ஒரு கருத்தைக்கூறித் தமது ஆற்றாமையை வெளிப்படுத்தி நின்றமையையும் யாவருமே அறிவர். அதன் பின்னர் சென்ற ஆவணி மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது ஆட்சியமைத்த மைத்திரி ரணில் அரசுக்கே திறைமறைவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பார் அனுசரணையாக விளங்கினர். வடக்கு, கிழக்கில் தமிழ்த்தேசியக்[illegible]

இவ்வாறிருக்க, தலைநகரில் தமிழ் முற்போக்குக் கூட்டணி என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று தமிழும் அற்ற முற்போக்கும் அற்ற யானைச் சின்னத்தின் கீழ்ப்போட்டியிட்டு மேலக மக்கள் முன்னணி என முன்னர் கபடி ஆடிய இக்கட்சியின் ஸ்தாபகர் மேல் மாகாணத்தின் தமிழ் வாக்காளர்களின் அமோக ஆதரவைப்பெற்று வெற்றிவாகை சூடி அமைச்சருமானதுடன் ஐ.தே.கவின் ஆட்சியதிகாரத்தில் உழைக்கும் மக்களினதும்தமிழ்மக்களினதும்காவலர் என்னும்முகமூடியை அணிந்துகொண்டு ஏகாதிபத்திய அமெரிக்காவிலிருந்து அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகவும் அடிக்கடியாகவும் விஜயம் செய்துகொண்டிருக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகளை மிகவும் குதூகலமாக வரவேற்று தமிழினத்தையும், உழைக்கும் மக்களையும் ஒட்டுமொத்தமாகக் காட்டிக்கொண்டிருக்கின்றார். இந்நபரின் முற்போக்கு முகமூடியையும் தமிழர் காவலர் என்னும் மர்மத்தையும் இனங்கண்டு தேசத்தின் உழைக்கும் பிரிவினரும், தமிழ் மக்களும் காலதாமதம் செய்யாமல் இந்நபரை அரசியல் அரங்கிலிருந்து முழுமையாக அகற்றுவதோடு தம்மைத் தற்காத்துக்கொள்ளவும் வேண்டும். இந்நபரின் பாணியிலே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்னும் மிகப்பெருத்த முகமூடியோடு இஸ்லாமிய தரப்பினரில் ஒரு சிலர் புதிய கட்சியொன்றையும் ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான கட்சிகளின் உருவாக்கத்தையிட்டு உழைக்கும் மக்களும் சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினரை உள்ளடக்கிய இனக்குழுமங்களும் தமது எதிரிகள் விடயத்தில் கொண்டிருக்கவேண்டிய விழிப்புணர்வைவிட அதிகளவு விழிப்புணர்வைக்கொண்டிருக்கவும் வேண்டும். ஏனெனில் இம்முகமூடி நபர்கள் எதிரிகளைவிடவே மிகவும் ஆபத்தானவர்கள். இம் முகமூடி நபர்களோடு வடக்கின் ஐ.தே.க அரச அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், விஜயகலா போன்றோரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் அவர்களும் அண்மைக்காலமாக அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்காவின் இராஜ்ஜியப் பிரதிநிதிகளுக்கு இராஜபாடை விரிப்பது தேசத்தினதும், தமிழ் மக்களினதும் எதிர்காலத்தை எங்கே கையில் இட்டுச்செல்லும் என்பதை நன்கு சீர்தூக்கிப்பார்ப்பது இன்றைய துரதிட்டவசமான நாட்டின் அரசியல் சூழ்நிலையில் மிகவும் இன்றியமையாதவொன்றாக அமைந்துள்ளது.

அமெரிக்கப் பிரதிநிதிகளின் தொடர்ச்சியான இலங்கை விஜயத்தின் பிரதிபலிப்புக்களாக ஐ.நாவுக்கான அந்நாட்டின் நிரந்த வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் அவர்களின் விஜயத்தையும் அவர் யாழ்/ஒஸ்மானியாக் கல்லூரி மாணவிகளோடு இணைந்து நடனமாடித் தனது அபாரமான அமெரிக்க இராஜ்ஜியப் பவரைக் காட்டிச் [illegible] குறிப்பிடலாம்.

அதன்பின்னர் அந்நாட்டின் இராஜாங்க ஆலோசகரும் இலங்கைக்கு விஜயம் செய்து இங்குவாழும் தமிழ் மக்கள் தொடர்பில் புளுகையும், புரளியையும் கிளப்பிவிட்டுச் சென்றிருந்தார். தற்போது இவ்வமெரிக்கப் பிரதிநிதிகளின் வரிசைக்கிரமமான இலங்கை விஜயத்தின் ஓர் அங்கமாக தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச் செயலாளர் கலாநிதி அமி சீரைட் அவர்களும் 18.12.2015இல் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அன்னாரின் இவ்விஜயம் உட்பட அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான விஜயம் முன்னெப்போதையும் விடத் தற்போது அதிகரித்துமுள்ளது. இந்த அதிகரிப்பு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்திலிருந்ததைவிடவும் அதிகரித்திருப்பதற்கு ராஜபக்ஷ அவர்களின் சீன சார்புப் போக்கும், ரணில் அவர்களுடைய அமெரிக்க சார்புப் போக்குமே காரணமாகவிருந்தபோதுங்கூட இலங்கை இனப்பிரச்சினையின் பாலான ஆயுதப்போராட்டத்தின் தோல்வியின் பின்னர் அவ்வினநெருக்கடியைச் சாதகமாகக்கொண்டு முழுத்தீவையும் தனது புதிய உலக மயமாக்கல் என்னும் கோரப்பசிக்குத் தீனியாக்க அமெரிக்க வல்லாதிக்கவாதிகள் முனைந்து நிற்பதன் ஓர் அங்கமாகவே அமெரிக்க சார்பு ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சி அதிகாரத்தைத் தமது இந்நோக்கத்துக்குக் கச்சிதமாகப் பயன்படுத்தித் தனது பிரதிநிதிகளை அடுக்கடுக்காக அந்நாடானது அனுப்பிக்கொண்டுமிருக்கின்றது. இவ்வேகாதிபத்திய அமெரிக்காவுக்கு இன்னுமொரு சாதகமான வாய்ப்பாக அமைந்திருப்பது சம்பந்தன், விஜயகலா, சுவாமிநாதன், மனோகணேசன், ரவூப் ஹக்கீம் முதலானோரின் ஐ.தே.க நலனும், அமெரிக்க சார்பு சுபாவமும் எனில் அது தவறன்று.

எனவே ஐ.தே.கவின் ஆட்சி அதிகாரமானது அமெரிக்க அரச பிரதிநிதிகளுக்கு இலங்கையில் இராஜபாடை விரிப்பதும், அப்பாடை மீது வீறுநடைபோட்டுச் சிறுபான்மையினங்களின் தலைவர்களெனப் பலராலும் தெளிவற்று விமர்சிக்கப்படுபவர்களான ஸ்ரீலங்கா தேசத்தின் எதிர்க்கட்சித் தலைவரான சம்பந்தன் அவர்களும், வடக்கின் அமைச்சர்களான டி.டிம்.சுவாமிநாதன், திருமதி.விஜயகலா, மகேஸ்வரன் ஆகியோரும், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்ற அசாதாரணமான கபடி வீரர்களும் அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகளுடன் கூடிக்குலவி மகிழ்வதையும் நோக்கின் இந்நிலையானது தொடர்ந்தும் நீடித்துச் செல்லுமாயின் இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் மீது இறுகப் பற்றிப்பிடித்துள்ள அடிமைச் சங்கிலியானது இனி ஒருபோதும் அகற்றமுடியாதளவுக்கு இறுக்கமடைவதுடன் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலொன்றான வியட்நாமை எவ்வாறு அமெரிக்காவானது சுபளீகரஞ் செய்ததோ அதைவிடத் தனது புதிய உலகமயமாக்கல் என்னும் கோரப்பசிக்கு இயைந்ததாக இந்து சமுத்திரத்தின் முத்தெனப் பெருமையுடன் வர்ணிக்கப்படுகின்ற மாம்பழத்தீவை அதன் விதை, தோல் என்பவையுட்பட முழுமையாக சுவைத்து மகிழுமென்பதில் எள்ளளவும் ஐயமுமில்லை.

மேலும் இதுவரையில் விஜயம் செய்தவர்களுக்குள் இறுதி நிலையிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி இலங்கையின் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகளையுஞ் சந்தித்துள்ளார்.

12ஆம் பக்கம் பார்க்க...

வீரப்பதி விநோதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சமாதானத்துக்கு அமெரிக்கா உறுதியான உதவி – அந்நாட்டுப் பிரதிநிதியின் மற்றுமொரு புரளி



"இலங்கை மக்கள் சமாதானம், செழிப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தைத் தொடர்கையில் அமெரிக்கா உறுதியான விதத்தில் அதற்கு உதவும் என இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகரும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்நிலைப் பதவிகளிலொன்றான அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலாளர் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளவருமான தோமஸ் ஷனோன் அவர்கள் தெரிவித்துள்ளார். தன்னுடைய இலங்கைப் பயணத்தின்போது திருகோணமலைக்கும் விஜயம் மேற்கொண்டுள்ள இந்த அமெரிக்க அரச பிரதிநிதி இலங்கைத் தமிழர் தலைவராக மூன்று தசாப்த கால ஆயுதப்போராட்டமும் தோல்வியில் முடிவடைந்த துயரம் மிகு பின்னணியில் புதிதாக முளைவிட்டு தற்போது அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பின்னர் ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியையும் அட்டகாசமாக அலங்கரித்துக்கொண்டிருக்கும் தமிழர் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களோடு இணைந்து திருக்கோணேஸ்வரக் கோணநாதப் பெருமானையும் மிகுந்த பக்தியுணர்வோடு வழிபட்ட மேற்படி அமெரிக்கப் பிரதிநிதியின் கருத்தைப் புதிய தமிழர் தலைவர் சம்பந்தன் அவர்கள் ஜீரணித்துக்கொண்டாலுங்கூடக் கோணநாதப் பெருமான் ஒருபோதும் ஜீரணித்துக்கொள்ளமாட்டாரென உறுதிபடக் கூறமுடியும்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் உறையும் தேவாரப் புகழ்பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரத்தின் கோணநாதர், உலக மயமாக்கல் என்னும் நவீன கோட்பாட்டின் நிமித்தமாக உலக மனித குலத்தின் குருதியைக் குடித்துக் குதூகலிக்கும் வெறியில் நாக்கை நீட்டி உமிழ்நீர் சிந்தக் காத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராஜாங்கப் பிரதிநிதியின் கருத்தை ஒருபோதும் ஜீரணித்துக்கொள்ளமாட்டாரென்னும் கருத்தை நிரூபணம் செய்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதியின் இலங்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் விரிவையுங் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும். அத்தோடு சம்பந்தன் அவர்கள் இலங்கைக்கு அடுத்தடுத்து விஜயம் செய்யும் அமெரிக்கப் பிரதிநிதிகளின் நிகழ்வுகளில் குதூகலத்துடன் பங்குபற்றித் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயல்வதாகக் கூறித் திருப்தியடைவது முற்றிலும் பொருளற்றவொன்றென்பதையும் சுட்டிக்காட்டியேயாகவேண்டும். சம்பந்தன் அவர்களின் இவ்வமெரிக்கா மீதான அசாதாரண உறவுபோன்றதே குறிஞ்சாத்தீவில் ஈ.பி.டி.பி அமைப்பினரின் கோரமான தாக்குதலில் படுகாயமடைந்த மாவை.சேனாதிராசா அவர்கள் யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தைத் திறப்பின்போது ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோடு முட்டிக்கொண்டு நின்று தன்னையும் இனங்காட்டிய இழிநிலையாகும். இதே மாவையார் அவர்கள் தான் தற்போதும் வடகிழக்குத்தமிழர்கள்.மலையகத்தமிழர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய சிறுபான்மை இன மக்களின் வாக்குகளினால் பதவிக்கு வந்த மைத்திரி-ரணில் அரசானது தமிழர் நலன் பேணவேண்டுமென ஆற்றாமையோடு இயைந்ததான ஒரு கருத்தை வெளியிட்டதோடு சுவாமிநாதன் அவர்களுக்கு அமைச்சர்ப் பதவி வழங்கவேண்டுமெனத் தாமே பரிந்துரைத்ததாகத் தனது பலவீனத்தை மேலும் பறைசாற்றி நிற்பதோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய தம்மைப் புறக்கணித்து வடக்கின் நலன்சார்ந்த தமது அமைச்சின் சேவைகளை முன்னெடுப்பதாகவுங் குறைப்பட்டுமுள்ளார். மாவையாரின் இக்குறைகூறலுக்குப் பதிலாக அமைச்சர் சுவாமிநாதன் அவர்கள் தான் சேனாதிராசா அவர்கள் கூறுவதைப்போலத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் புறக்கணிக்கவில்லை எனக் கருத்து வெளியிட்டுள்ளமையை ஒருபுறமாக வைத்தாலுங்கூட மாவை சேனாதிராசா அவர்களுடைய இவ்வாறான கருத்துக்கள் சம்பந்தன் அவர்களுடைய அமெரிக்கப் பிரதிநிதிகள் சார்ந்த நடவடிக்கைகளோடு இணைந்து செல்வதையும் நோக்கக் கூடியதாகவுமுள்ளது. இவ்விடத்தில் சம்பந்தன் அவர்களின் அமெரிக்கப் பிரதிநிதிகள் சார்ந்த கையாலாகாத்தனமான நடவடிக்கையையும், மாவையார் அவர்களின் டக்ளஸ், சுவாமிநாதன் போன்றவர் முட்டிக்கொண்டு நின்று அரசியல் செய்யும் அந்தோ பரிதாபத்தையும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க 15.10.2015இல் சபையில் தெரிவித்த வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீடமைப்பு நிதிபோதாது. ஆகையால் இந்நிதியுதவியை மேலும் 3 இலட்சத்தால் அதிகரிக்கவேண்டும் எனத் தெரிவித்த கருத்தோடு ஒப்புநோக்கும்போது சம்பந்தன், சேனாதிராசா போன்றோர் வெட்கித் தலைகுனிவதே சாலவும் பொருத்தமானவொன்றாகவிருக்கும். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷனோன் அவர்கள் இலங்கை விஜயத்தின் போது வெளிக்காட்டிய அம்மணத்தை முழுமையாக அம்பலப்படுத்தமுதல் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அவர்கள் 15.10.2015இல் கூடிய நாடாளுமன்ற அமர்வில் தமிழர் நலன் தொடர்பில் தெரிவித்த மணியான கருத்துக்களை வழுவாமல் வழங்குவதும் வாய்மையேயாகும். அன்னாரால் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்ட நன்னெறிபயக்கும் கருத்துக்கள் கீழ்வருமாறு அமைந்துள்ளன. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க 2009இல் மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்ட ஐந்தரை லட்சம் ரூபா நிதி போதாது. இதனால் அந்த மக்கள் தமது வீடுகளைக்கட்டி முடிக்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிதியுதவித்தொகை 03இலட்சம் ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டும். இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள்குடியேறிய மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. முகாம்களில் இருப்பவர்களைவிட மீள்குடியேற்ற மக்கள் பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 06ஆண்டுகள் கடந்தபோதும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு இன்னும் பெரிய பிரச்சினைகள் உள்ளன. இன்னும் அந்த மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். சுன்னாகம், வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் 13முகாம்களுள்ளன. வலிகாமம் பகுதியில் காணிகள் விடுவிக்கப்பட்டன. இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இதுவரை செய்துகொடுக்கப்படவில்லை. முகாமில் வாழ்பவர்களைவிட மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்குப் பெரிய பிரச்சினைகள் உள்ளன. இதேவேளை வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. ஒரு வீட்டைக்கட்டி முடிப்பதற்காக ஐந்தரை இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

போர் 2009இல் முடிவடைந்ததையடுத்து இந்தியா மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியால் வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2010இல் இவ்வீட்டுத் திட்டத்துக்கான மதிப்பீடு செய்யப்பட்டது. இருப்பினும் இவ்வீட்டுத் திட்டத்துக்கான நிதியுதவி 2012,2013,2014ஆம் ஆண்டுகளில் தான் உரியவர்களுக்கு வழங்கப்பட்டது. 2010இல் இந்த வீட்டுத் திட்டத்துக்கான மதிப்பீடு செய்யப்பட்டது. சீமெந்து, கம்பிகள்ஏனைய பொருட்களின் விலைகள் 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் அதிகரித்திருக்கும். எனவே இந்த் ஐந்தரை இலட்சத்தை வைத்துக்கொண்டு அந்த மக்களால் வீடுகளைக் கட்டிமுடிக்கமுடியாது. அந்த மக்கள் கூடாரம்போன்ற வீடுகளில் வாழ்கின்றனர். எனவே அவர்கள் நல்லதொரு வீட்டைக் கட்டிமுடிக்க வேண்டுமாயின், மேலும் 03இலட்சம் ரூபா அந்த மக்களுக்கு வழங்கவேண்டும்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அவர்கள் கூறிய மேற்படி கருத்துக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாருக்கும், வடக்கின் அமைச்சர்கள் சுவாமிநாதன், திருமதி. மகேஸ்வரன் ஆகியோருக்கும்தலைசிறந்த படிப்பினையாகவும் இருக்கவேண்டும். அத்தோடு அக்கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் அவர்களும் தமிழ் மக்கள் அவலம் தொடர்பிலும் 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் சார்பாகவும் பாராட்டத்தக்க கருத்துக்களை வெளியிட்டுமுள்ளார்.

இவ்விடத்தில் கோணேஸ்வரப் பெருமானைப் பக்திபூர்வமாகத் தரிசித்ததோடு இன்றைய வடக்கின் தமிழ்த் தலைவரும், ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் அவர்களுக்கு இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அமெரிக்கா உறுதியான உதவியை வழங்கும் எனச் சத்தியஞ் செய்துகொடுத்திருந்த சத்தியவானான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷனோன் அவர்கள் தற்போது மற்றுமொரு ஆத்திரத்தை வரவழைக்கக்கூடிய மிகு நகைச்சுவையோடுயியைந்த கருத்தையும் கண்மூடித்தனமாகக் கட்டவிழ்த்துவிட்டுமுள்ளார். அமரர் லக்ஸ்மன் கதிர்காமர் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட அமைதி வழியிலே சென்று இலங்கையில் இனங்களுக்கிடையில் இணக்கத்தையேற்படுத்தவேண்டுமென மேற்படி அமெரிக்கப் பிரதிநிதி கூறியமையே மிகுந்த சிரிப்புக்கிடமானவொன்றென இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது மிகவும் இன்றியமையாதவொன்று.

விடுதலைப்புலிகளை வேரும் வேரடி மண்ணுமில்லாமல் அழித்தொழிப்பதன் மூலம் மட்டுந்தான் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கமுடியுமென வீர சபதமெடுத்த வெட்கங்கெட்ட தமிழரான அமரர் லக்ஸ்மன் கதிர்காமர் அவர்களின் அமைதி வழி சந்திரிகா அம்மையார் அவருக்குப் பிச்சையாக வழங்கிய அமைச்சர்ப் பதவியின் சுகபோகம் தலைக்கேறிய நிலையில் மிகவும் [illegible] வெளியிட்ட மேற்கூறிய [illegible] அமெரிக்க இராஜாங்க ஆலோசகர் தோமஸ் ஷனோன் அவர்கள் கருதுவது வியப்புக்குரியவொன்றல்ல. ஆனால் அவ்வாறான உலக மயமாக்கல் என்னும் புதிய வெறிபிடித்த முற்றிலும் அகிலந் தழுவியளவிலான மனிதத்துக்கு மாறான கோட்பாட்டைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராஜாங்கப் பிரதிநிதியோடு பிட்டுக்கு மண் சுமந்த பெருமானாரின் திருமலையின் கோணநாதராக வீற்றிருக்கும் கோணேஸ்வரப்பொருமானின் முன்றலில் சம்பந்தன் அவர்கள் கூடிக்குலவி களிப்படைந்தமை தான் வியப்பிலும் வியப்பாகவுள்ளது. சம்பந்தன் அவர்களின் இந்நடவடிக்கையை 1977இல் இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலுக்குச் சற்றுப்பின்னர் இன்றைய காலகட்டத்தில் அன்னார் வகித்துக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியையே அலங்கரித்துக்கொண்டிருந்த அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் அன்றைய பிரதமர் பிரேமதாசா அவர்களோடு இணைந்து கொழும்புத் துறைமுக நுழைவாயிலில் இறுமாப்போடு தரித்துநின்று அமெரிக்க இராஜதந்திரிகளுக்கு வாயெல்லாம் பல்லாக நின்று கைலாகுகொடுத்து வரவேற்ற கயமைத்தனத்தோடு ஒப்புநோக்கலாம். அன்று எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த தமிழர் தலைவர் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் கொழும்பு துறைமுக நுழைவாயிலில் அமெரிக்க இராஜதந்திரிகளோடு இணைந்து வாயெல்லாம் பல்லாக நின்று களிபேருவகைகொண்டதன் மூலம் தமிழ் மக்களையும், இளைஞர்களையும் எதிரிகளுக்குச் சிறிதளவேனும் மனக்கூச்சமில்லாமல்க் காட்டிக்கொடுத்தார். அதைப்போலவே இன்றும் அமிர்தலிங்கம் அவர்கள் அந்நாளில்வகித்தஎதிர்க்கட்சித்தலைவர்ப் பதவியை வகித்துக்கொண்டிருக்கும் திருமலை இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் உறையும் கோணேஸ்வரத் தலத்தில் அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதியோடு இணைந்து அப்பிரதிநிதியின் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களுடைய அமைதிவழியை இலங்கையில் நிலைநாட்டும் அறப்பணியில் ஈடுபட்டும் இருந்திருக்கின்றார். ஆனால் ஒரேயொரு வித்தியாசம் யாதெனில், அன்று அமிர்தலிங்கம் அவர்கள் வாயெல்லாம் பல்லாக மட்டும் கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதிகளோடு இணைந்து களித்து நின்றார். ஆனால் சம்பந்தன் அவர்களோ இன்று பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் உறையும் தேவாரப்பாடல்பெற்ற திருமலைத் திருத்தலத்தில் புதிதாகப் பல்லு முளைத்திருக்கின்றதோ? என ஐயுறும்விதமாக அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகளோடு சேர்ந்து களிபேருவகைகொண்டமையே அவ்வொரேயொரு வித்தியாசமாகும். அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் அன்றைய துரோகத்தனம் தமிழ் இளைஞர்களின் அருமருந்தன்ன ஆயுதப்போராட்டத்தைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தியது. ஆனால் சம்பந்தன் அவர்களின் இன்றைய காட்டிக்கொடுப்பு இலங்கையின் ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆயுட்கால விசுவாசிகளான வடக்கின் சுவாமிநாதன், விஜயகலா போன்றவர்களோடும், இஸ்லாமிய மக்களின் வாக்குகளைச் சூறையாடிக்கொண்டிருக்கும் அதே ஐ.தே.கவின் விசுவாசிகளான ரவூப் ஹக்கீம் முதலானோர்களோடும், மலையகத்தின் ஆயுட்கால ஐ.தே.க அடிவருடிகளான மனோ கணேசன் ஆகிய பித்தலாட்டக்காரர்களோடும் இணைந்து அதல பாதாளத்துக்குள் தள்ளி வீழ்த்திவிடும் என்பதே, நாடாண்ட மன்னன் அரிச்சந்திரன் சுடலை காத்தமைக்கு ஒப்பான அசாதாரணமான வாய்மையாகும்.

08ஆம் பக்கம் பார்க்க...

கருணைக்கண்ணன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஒரு பகிரங்க மடல்

## -சிரேஷ்ட ஊடகவியலாளர் ராஜாஜி ஸ்ரீதரன்

**கடந்த வாரத்தொடர்ச்சி...**

பிரதமர் மோடியுடனான தங்கள் சந்திப்பைத் தொடர்ந்து, இந்திய அரசு வடக்கில் ஆரம்பிப்பதற்கு முன்மொழிந்த தொழிற்துறைத்திட்டத்துக்கு தங்கள் நிர்வாகம் பதிலளிக்கத் தவறியதால் அந்தத்திட்டம் தென்னிலங்கைக்கு வழங்கப்பட்டமைக்கு தாங்கள் கூறப்போகும் பதில் தான் என்ன? தங்களை அரசியலுக்கு இழுத்து வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு துரோகமிழைத்து புதியதொரு தடத்தில் அல்லது அணியில் பயணிக்க தாங்கள் முடிவு செய்திருப்பதையும் அனைவரும் புரிந்துகொண்டிருக்கும் வேளையில் கூட்டமைப்பின் உள்நெருக்கடிகளை பேசித்தீர்க்கலாம் என்று கூறுவது தான் வியப்பூட்டுகிறது. அவ்வாறு உங்களால் தீர்வுகான முடிந்தால் உண்மையில் தமிழினம் அதற்காக உங்களுக்கு நிச்சயம் நன்றி பாராட்டும்.

முதல்வர் அவர்களே... தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்தப்பட்ட தங்களுக்கு மக்கள் வழங்கிய மகத்தான ஆதரவையும் தங்களுக்கு பதிலான 1,33,000க்கும் அதிகமான வாக்குகளும் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த வாக்குகள் என்று எண்ணுவதும் கூட்டமைப்பு அல்ல. தங்களை மக்களே வடமாகாண முதல்வராக தெரிவு செய்ததாகவும் சிறந்த கல்விமானும் தர்க்கவியல் கற்றவருமான தாங்கள் கூறுவது சற்று நெருடலாக உள்ளது. வடமாகாண மக்களே பெரும ளவில் வாக்களித்தவர்கள். அவர்களே உங்களது கட்சி. அவர்களின் நன்மையே தங்களது கட்சிக் குறிக்கோள். என்றும் கூட்டமைப்பு பதவியைக்கொடுத்தது என்பதிலும் பார்க்க மக்களே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள் என்பதே உண்மையாகும் என்பது போன்ற வார்த்தைகள் உணர்பூர்வமானவை. தென்னிந்திய தமிழக அரசியலில் இவ்வாறான வார்த்தை ஜாலங்கள் எதிர்காலத்தில் இன்னும் கூடுதலான வாக்குகளை வாரி வழங்க உதவலாம். ஆனால் எமது மண்ணில் இவ்வாறான பசப்பு வார்த்தைகள் ஒருபோதும் பயன்தராது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம். எனினும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தங்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தமுடியாது என்று தாங்கள் கூற முற்படுவதையும் அதன் உள் அர்த்தத்தையும் புரிந்து கொண்டுள்ளோம்.

மேற்குறிப்பிட்ட தங்களது நிலைப்பாட்டை தெரிந்துகொண்ட பின்னர் தேர்தலின்போது கட்சிக்கு ஆதரவு வழங்காது தவிர்த்தமைக்கான காரணங்களை ஆராயவேண்டிய அவசியம் சிந்தனைத்திறனும் அரசியல் அனுபவமும் கொண்ட எவருக்கும் ஏற்படாது. உள் ஜனநாயகமே கட்சியொன்றைவளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லும் என்பதும் உறுப்பினர்களின் கருத்துக்களை கட்சி பிரதிபலிக்கவேண்டும் என்பது எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ள வேண்டியது உண்மையோ அதுபோன்றே ஆளுமைமிக்க தலைமையொன்றின் முடிவோடு உறுப்பினர்கள் உடன்பட முடியாது விடின் அதனை தலைமைத்துவத்தின் தான் தோன்றித்தனமான முடிவு என்று விமர்சித்து பகிரங்கமாக கருத்துக்களை வெளியிடுவது ஆரோக்கியமானதல்ல என்பதும் தாங்கள் அறியாததல்ல.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள், அதன் ஜனநாயகத்தன்மை, அதனுடைய அரசியற்கோட்பாடு, அதற்கான நடைமுறைப்பண்பு அல்லது செயல் ஒழுக்கம் போன்றவை பகிரங்கமான விவாதத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ள வேளையில் தான் தாங்கள் கட்சியுடன் இணைந்து பணியாற்ற முன்வந்தீர்கள். கூட்டமைப்பின் தலைமை தான் தோன்றித்தனமாகவும், தன்னிச்சையாகவும் செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டும் தாங்கள் அதனை தகுந்த முறையில் சரியான வழியில் நடத்திச் செல்வதற்கு ஆக்கபூர்வமான திட்டங்கள் எதனையும் முன்வைத்ததாக எந்த தகவலும் இல்லை. கூட்டமைப்பை சரியான திசையில் பயணிக்க வைப்பதற்கு தாங்கள் எந்த முயற்சியும் மேற்கொண்டதாகவும் நாம் அறியவில்லை. மாறாக கூட்டமைப்பை முறியடிக்கும் வகையில் மாற்றுத்தலைமையை உருவாக்கும் முயற்சியிலேயே தாங்கள் குறியாக உள்ளீர்கள்.

தமிழ் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு இன்னமும் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாது தலைமையை மதித்து செயற்படுவீர்கள் என்றே நம்புகிறோம். இல்லையெனின் தாங்கள் எவருடைய நிகழ்ச்சிநிரலின் கீழ் செயற்படுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவதுடன் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதற்கு தென்னிலங்கை மேற்கொள்ளும் சதித்திட்டங்களுக்கு துணை போகக்கூடியவர் என்று முன்னர் விடுக்கப்பட்ட எச்சரிக்கை சரியானதே என்றும் நிரூபணமாகிவிடும். மறுபுறத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு மாற்று அணியொன்றை உருவாக்கி அதற்கு தலைமைத்துவத்தை ஏற்பதற்கு தயாராவதற்கு முன்பதாக அவ்வாறானதொரு தலைமைத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் கருத்துள்ள கட்சிகளோ அல்லது தனிநபர்களோ தங்கள் பின்னால் விசுவாசத்துடனும். நேர்மையுடனும் அணிதிரளுவார்களா? என்பதை உறுதிசெய்யவேண்டிய கடமைப்பாடும் தங்களுக்குண்டு. இவை தவிர மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களையும் இரகசிய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுபவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களையும் இணைத்துக்கொண்டு அவர்கள் தயவில் தனிவழி தேடுவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பானது என்பதைதாங்கள் அறியாதிருக்கிறீர்களா? அவ்வாறெனின் தங்களுக்கு சிலவற்றை நினைவூட்டுவது பொருத்தமானது.

இன்று உங்களின் புதிய அணிக்கு பக்கபலமாக இருப்பவர்களில் முதன்மையானவர்கள் என்று கருதப்படும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகிய அனைவரும் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் என்ற போர்வையில் தமிழினத்தின் நலன்களுக்கு எதிராக இயங்குபவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள். இவர்களில் ஒருவரான விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலன் என்றழைக்கப்படும் சசிதரன் என்பவரின் துணைவி அனந்தியின் அரசியல் பின்புலம் தொடர்பான சில குறிப்புகளை இங்கு பதிவு செய்தே ஆக வேண்டும். எழிலனின் மனைவியான அனந்தி, கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் அறிவிக்கப்படும் வரை எவராலும் அறியப்படாத புதுமுகமாகவே இருந்தார். எழிலன் என்கிற போராளியின் மனைவியான அனந்தி திடீரென்று தேர்தல் களத்தில் இறக்கப்பட்டார். விடுதலைப்புலிகளின் அனுதாப வாக்குகளை சுவீகரித்துக்கொள்ளும் கூட்டமைப்பின் நகர்வு அது. ஆனால் வாக்களிப்பு நெருங்கிய வேளையில் அனந்தியின் வீட்டை முற்றுகையிட்ட இராணுவத்தினர், அனந்திக்கு பிரபல்யம் தேடிக்கொடுத்தார்கள். ஊடகங்களில் அவரது செய்திகள் முதன்மை வகிக்கவும் எங்கும் அனந்தியின் பெயர் பேசப்பட்டது. எண்பதாயிரம் வாக்குகளுக்கு மேலாக அள்ளிக்குவித்து அனந்தி முதன்மை அரசியல்வாதியானார். இத்தனை பெரிய வெற்றியை இலங்கை இராணுவமே அவருக்குத் தேடிக்கொடுத்தது.

தமிழர் ஒற்றுமையை சிதைக்கும் தென்னிலங்கைத [illegible] அவை என்பதை பின் தொடர்ந்த சம்பவங்கள் துல்லியமாக காட்டுகின்றன. அனந்தி மீது தாக்குதல் நடாத்தினால் அது அவருக்கு சாதகமாகவே போகும் என்பதை அறிந்திருந்தும் அவரது வெற்றிக்கு அப்போதைய மஹிந்த ராஜபக்ஷவின் இராணுவம் துணை புரிந்தது. அனந்தி வெற்றி பெற்று மாகாண சபைக்கு உறுப்பினரானதும் தனக்கு அமைச்சர் பதவி தரப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தபோதிலும் அவரது நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட தமிழரசுக்கட்சித் தலைமை பின்னர் சுதாகரித்து அவதானமாக நடந்துகொண்டது. எதிர்பார்த்தது போன்றே கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மதிக்காது செயற்பட்டார். சுயமாக ஜெனிவா சென்றார். ஊடகங்களில் சுயமாக அறிக்கைகளை வெளியிட்டார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே அனந்தி கோரிக்கையை முன்வைத்தார். தான் சார்ந்திருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க முடிவெடுத்தபோதிலும் அதற்கு எதிராக முடிவெடுத்தது தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு பரப்புரைகளை மேற்கொண்டார்.

தமிழ் மக்கள் தேர்தல் பகிஷ்கரிப்பை மேற்கொண்டால் மஹிந்த ராஜபக்சவே பலனடைவார் என்று அனந்தி அறியாமல் இருந்திருக்க முடியாது என்பதைதாங்கள் ஏற்றுக்கொள்ளுவீர்கள். இன்னும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவரும் சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சி நடத்துனருமான ரங்காவின் நிகழ்ச்சியில் தோன்றி கூட்டமைப்புக்கு எதிராக கருத்துகளை கூறியவர் என்பதைவிட அவருடைய நிகழ்ச்சி நிரலுக்கு பின்புலமாக உள்ள சக்திகள் பற்றி மேலதிக விளக்கம் அவசியமற்றது. தங்களுடைய அணிக்கு பக்கபலமாக கருதப்படுபவரும் அனந்தி எழிலனின் செயற்பாடுகளுக்கும் அவருக்கு துணையாக இருப்பவருமான மற்றொருவர் சிவாஜிலிங்கம். அதிதீவிர தேசியப்பற்றாளராகவும், விடுதலைப்புலி ஆதரவாளராகவும் காட்டிக்கொள்ளும் சிவாஜிலிங்கம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் என்பதாலும் இயக்கத்தலைமைக்கு நெருக்கமானவராக பலரால் நோக்கப்பட்டவர்.

போர் முடிவடைந்த பின்னர் கடுமையாக சுகவீனமடைந்த பிரபாகரனின் பெற்றோரின் நலன்களைக் கவனித்த சிவாஜிலிங்கம். அதற்காக அரசாங்கத்துடன். குறிப்பாக அப்போதைய பாதுகாப்பு செயலாளருடன் நெருக்கமாகவே செயற்பட வேண்டியிருந்ததை அனைவரும் அறிவார்கள். அதி உச்ச அதிகாரங்கள் கொண்டிருந்த அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் எந்த நேரத்திலும் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு அவரின் நெருங்கிய நட்பு வட்டாரத்திலிருந்தவர் சிவாஜிலிங்கம். விடுதலைப்புலிகளுக்கும் தமிழ்த்தேசியத்திற்கும் ஆதரவாகவும் எவ்வாறான கருத்தையும் துணிந்து சொல்லக்கூடிய துணிச்சலானவர் என்று தமிழ்மக்கள் இவர் குறித்து பெருமிதம் கொண்டிருந்தாலும் இந்தத் துணிச்சல் சிவாஜிலிங்கத்துக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை பழுத்த நீதியரசரான தாங்கள் சிந்தித்து பார்க்காதிருப்பது வியப்பைத் தருகிறது. (தாங்களும் அதே அணியை சேர்ந்தவர் என்பதால் அதனை அறிந்திருப்பீர்கள் என்று இப்போது உணருகிறோம்)

போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற நடந்த ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்ட சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தவேளையில் அதற்கு எதிராக சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். சிவாஜிலிங்கம் அந்தத் தேர்தலில் போட்டியிட்ட சரத்பொன்சேகாவுக்கு கிடைக்க இருந்த தமிழ் வாக்குகளை தடுத்தார் என்று கூறுவதை விட சிவாஜிலிங்கம் தன்னை எதிர்த்து போட்டியிடுவதை காரணம் காட்டி மஹிந்த ராஜபக்ஷ கூடுதலான வாக்குகளை சிங்கள மக்களிடம் பெறுவதற்கு உதவினார். இதேபோலவே சிவாஜிலிங்கம் கடந்த பொதுத்தேர்தலிலும் நடந்து கொண்டார். மஹிந்தவை எதிர்த்து போட்டியிடுவதாகக்கூறி . குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டார். இங்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கே சிவாஜிலிங்கம் பயன்பட்டார். சிவாஜிலிங்கம் தம்மை எதிர்த்து போட்டியிடுவதை பிரச்சாரம் செய்த மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களின் வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்கொண்டார்

உங்களுக்கு மிகுந்த பக்க பலமாகவும், பின்புலமாகவும் செயற்படும் மிக முக்கியமான மற்றொருவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். மிகவும் தீவிரமான தேசியப்பற்றாளராக தன்னை நிலைநிறுத்த முயன்று வரும் கஜேந்திரகுமார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வலுவான மாற்றுத் தலைமை தானே என்ற மாயையை உருவாக்கி அதற்கான ஆதரவையும் கூட்டமைப்புடன் முரண்படுவோரிடமிருந்து திரட்டி வருகிறார் சிவாஜிலிங்கம் போலவே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதற்கே பலரும் தயங்கிய காலத்திலேயே, விடுதலைப்புலி ஆதரவுக் கருத்துக்களை வெளியிட்டு மக்களை மெய்சிலிர்க்க வைத்தவர்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப்பேரவை அமர்வுகளுக்கு கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து அங்கு செல்வதை வழக்கமாக கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒவ்வொரு தடவையும் ஐக்கிய நாடுகள் சபையால் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பதையே பதிவுசெய்து கொள்வார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த போது அனைத்து தமிழ் தரப்பும் அதற்கு ஆதரவளித்த வேளையில் கஜேந்திரகுமார் அதனை எதிர்த்தவர். இருந்தும் கடந்த பொதுத்தேர்தலின் போது கஜேந்திரகுமார் அணியினரை வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்பதற்காக தாங்கள் திரைமறைவில் செயற்பட்டீர்கள். தேர்தலில் நடுநிலைமை வகிக்கப்போவதாக முதலில் அறிக்கைவிட்டீர்கள். பின்னர் அவர்களின் வெற்றிக்காக ஆதரவாகவும் கூட்டமைப்பின் ஒற்றுமையை மீறியும் அறிக்கைவெளியிட்டிருந்தீர்கள். இருந்தும் மக்கள் மிகத்தெளிவாக அவர்களை நிராகரித்தார்கள். இன்னொரு வகையில் கூறுவதானால் உங்கள் பரப்புரையை மக்கள் செவிமடுக்கத்தயாராக இல்லை என்ற துல்லியமான செய்தி உங்களுக்கு தரப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் போலவே கஜேந்திரகுமாரும் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியையே விரும்பினார் என்று தமிழ்மக்கள் உணர்ந்து அவரை நிராகரித்திருக்கும் நிலையில் தமிழினத்துக்கு தலைமை தாங்கும் வேட்கை கொண்டிருக்கும் தாங்கள் இந்த உண்மையை உணராதிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு எதிராக மாற்று அணியை உருவாக்கும் திட்டத்துக்கு உங்களுக்கு மற்றொரு தூணாக செயற்படுபவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். 2001ம் ஆண்டு காலப்பகுதியில் எந்த நிபந்தனையும் இன்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைத்துகொண்டால் போதும் என்ற நிலையில் இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்தி புதிய தலைமையை உருவாக்க முற்பட்டுள்ளதை அனைவரும் அறிவர்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனமூர் அரசியல் திட்டமும், பயனற்றுப் போன தமிழர் வரலாறும்

**கடந்த வாரத்தொடர்ச்சி...**

காரணம் இவ் அமைச்சரவையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் ஒருவர் தலைமை தாங்காது பிரதம காரியதரிசி தலைமை வகித்தமையாகும். அமைச்சரவையின் பண்புகளை அவதானிக்கும்போது அவதானிக்கக்கூடிய இன்னொரு விடயம் இங்கு மக்களால் தெரிவாகி மக்களுக்கு பொறுப்புக்கூற கூடியவர்களுக்கு குறைந்தளவிலான அதிகாரமும் மக்களால் தெரிவு செய்யப்படாது மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டி அற்றவர்களுக்கு அதிகப்படியான அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது.

**நன்மைகள்**

இலங்கை பிரதானிகளது நீண்டகால கோரிக்கையான பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற ஆட்சிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை அமைச்சரவையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபை ஆட்சி முறைக்கு ஒரு பயிற்சிக்களமாக விளங்கியது. ஆரம்பகாலத்தில் காரியதரிசிகள் கடும் போக்காக நடந்தபோதிலும், பிற்பட்ட காலங்களில் சுமுகமான உறவைப்பேணி வந்தனர். அத்துடன் காரியதரிசிகளாக இலங்கையர்களும் நியமிக்கப்பட்டனர்.

**உதாரணம்:-** நிதிக்காரியதரிசியாக இலங்கையரின் சார்பில் ஒருவர் தெரிவானார்.

**குறைபாடுகள்**

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் ஒருவர் அமைச்சரவைக்கு தலைமை தாங்காமை.

அமைச்சரவையின் முக்கிய அம்சமான "கூட்டு பொறுப்பு" எனும் விடயம் இங்கு உரிய முறையில் பேணப்படவில்லை.

அமைச்சரவையினூடாக இலங்கை பிரதானிகளுக்கு் சில அதிகாரம் வழங்கப்பட்டபோதிலும் பொறுப்புடைய அமைச்சர்கள் பிரித்தானிய அரசு சார்பாக நியமனம் பெற்ற காரியதரிசிகளிடம் வழங்கப்பட்டமை. இதன் காரணமாக இலங்கை பிரதானிகளால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை.

கட்சிகளின்மை, கட்சிகளினூடாக தெரிவான பிரதமர் ஒருவர் தலைமை தாங்காமை போன்றவற்றினால் "கூட்டுப் பொறுப்பு" இருக்கவில்லை.

மூன்று காரியதரிசிகளும் அமைச்சரவைக்குள் ஒரு உப மந்திரி சபையாக செயற்பட்டு வந்தனர்.

இங்கு ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபையானது சர்வ சிங்கள மந்திரி சபையாகவே தொழிற்பட்டதாக விமர்சிக்கப்படுகின்றது. சிறுபான்மையினருக்கு போதிய வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

**சர்வஜன வாக்குரிமை**

ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் மத்தியில் காணப்படக்கூடிய அடிப்படை வேறுபாடுகளான இன, மத, மொழி, பிரதேச, வர்க்க, பால், சித்தாந்த வேறுபாடுகள் எதையும் பாராது ஒரு குறிப்பிட்ட வயது பிரிவினருக்கு மேல் அனைவருக்கும் வழங்கப்படுகின்ற வாக்குரிமை சர்வஜன வாக்குரிமையாகும். டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன் இலங்கையில் சொத்து, கல்வி, பால் அடிப்படையிலான மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையே காணப்பட்டது. இதன்மூலம் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 4வீதமானோருக்கே வாக்குரிமை கிடைக்கப்பெற்றிருந்தது. இது ஜனநாயகத்துக்கு முரணானது. இம்மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை நீக்கி டொனமூர் குழுவினர் 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான வாக்குரிமையை வழங்கினர். இவ்வாறு வழங்கப்பட்ட வாக்குரிமையே சர்வஜன வாக்குரிமையாகும்.

பிரித்தானியா, அப்போது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த குடியேற்ற நாடுகளில் இலங்கைக்கு முதல் முறையாக சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமையானது புரட்சிகரமான விடயமாகும். டொனமூர் குழுவினர் சர்வஜன வாக்குரிமையை வழங்க முன்வந்தபோது, அப்போது இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வந்த தேசிய இன ரீதியான இயக்கங்களில் உயர்ந்தோர் குழாமினர் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்பதற்கு பல்வேறு காரணங்களை எடுத்துரைத்தார்கள்.

**கல்வி**

உயர் மத்தியதர வகுப்பினர் கல்வியறிவு படைத்தவர்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமெனவலியுறுத்தினர். கல்வி அறிவு உடையவர்களே சிந்தித்து செயற்படுவார்கள், அவர்களாலேயே நாட்டுக்குத் தேவையான தலைவர்களை தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும், எனவே கல்வி அறிவு அற்றோருக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்றனர்.

இதற்குப் பதிலளித்த டொனமூர் குழுவினர், அறிவின் அடிப்படையில் வாக்குரிமையை மட்டுப்படுத்தக்கூடாது, கல்வி அறிவு உடையவர்கள் மட்டும் தான் புத்தி கூர்மையானவர்களாக இருப்பார்கள் என்பதை ஏற்க முடியாது. சில சமயம் கல்வி அறிவு உடையவர்களை விட கல்வி அறிவு அற்றவர்கள் புத்திசாலித்தனமாக செயற்படலாம். அது மட்டுமன்றி அவன் கல்வியை கற்காதது அவனது குற்றமில்லை. உரிய காலத்தில் கல்வியை போதிக்காதது ஆட்சியாளர்களது குற்றமாகும். எனவே கல்வியறிவின் அடிப்படையில் வாக்குரிமையை மட்டுப்படுத்தக்கூடாது என்றனர்.

**சொத்து**

சொத்து உடையோருக்கே வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்றனர். சொத்தற்றோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால் அவர்கள் பணத்துக்காக வாக்குகளை விற்க முற்படுவர். அத்துடன் சொத்தற்றோர் நாட்டுப்பற்று உடையவராகவும் காணப்படமாட்டார். எனவே சொத்துடையோருக்கே வாக்குரிமை வழங்கவேண்டும் என்றனர்.

இதற்கு பதிலளித்த டொனமூர் குழுவினர் சொத்துரிமையின் அடிப்படையில் வாக்குரிமையை மட்டுப்படுத்தக்கூடாது என்றும், சொத்துடையவர்களே நாட்டுப் பற்று உடையவர் என ஏற்க முடியாது ஏனெனில் முதலாம் உலகமகா யுத்தத்தின் போது சொத்துடைய அனைவரும் தமது சொத்துக்களை பயன்படுத்தி வேறு நாடுகளுக்கு சென்றுவிட, சொத்தற்ற பாமர மக்களே நாட்டுக்காக போராடி உயிர் நீத்தனர். எனவே சொத்துடையோர் தான் நாட்டுப் பற்றுடையோர் என்பதை ஏற்க முடியாது. ஆகவே சொத்துரிமையின் அடிப்படையில் வாக்குரிமையை மட்டுப்படுத்தக்கூடாது எனக் கூறி அனைவருக்குமாக வாக்குரிமையை வழங்க முன்வந்தனர்.

**இலஞ்ச ஊழல்**

உயர் மத்திய தர வகுப்பினர் வாக்குரிமை விஸ்தரிக்கப்படும் போது இலஞ்ச ஊழல் அதிகரிக்கும் என்றனர். பாமர மக்கள் பணத்துக்காக தமது வாக்குகளை விற்க முற்படுவர் இதனால் நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றும் எனவே வாக்குரிமை விஸ்தரிக்கப்படக்கூடாது என்றனர்.

இதற்கு கருத்து தெரிவித்த டொனமூர் குழுவினர் வாக்குரிமை விஸ்தரிக்கப்படும் போது லஞ்ச ஊழல் அதிகரிக்கும் என்பதை ஏற்க முடியாது. ஏனெனில் பிரித்தானியாவில் வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்ட ஒவ்வொரு காலக் கட்டத்திலும் லஞ்ச ஊழல் குறைவடைந்து கொண்டே சென்றது எனவே இக்கருத்தை ஏற்க முடியாது என்றனர்.

**வயதெல்லை**

உயர் மத்திய தர வகுப்பினர் வாக்குரிமை வழங்கப்படும் வயதெல்லையானது 25 ஆக உயர்த்தப்படவேண்டும் என்றனர். 25 வயதை அடையும்போது ஒருவன் முதிர்ச்சி அடைகின்றான். எனவே வாக்களிக்கும் வயதெல்லை 25 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்றனர்.

இதற்கு பதிலளித்த டொனமூர் குழுவினர் சர்வதேச ரீதியாக ஒருவன் குடும்ப பொறுப்பை ஏற்கக்கூடிய வயதெல்லை 21 என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குடும்ப பொறுப்புக்களை ஏற்க தகுதியுள்ளவனால் நாட்டின் தலைவர்களை தெரிவு செய்யக் கூடிய ஆற்றல் இருக்கும். அத்துடன் தற்போது வாக்களிக்கும் வயதெல்லை 25 ஆக உயர்த்தப்படும் போது ஏற்கனவே வாக்குரிமை உள்ள சிலருக்கு அவ் வாய்ப்பு இல்லாது போகும். இது நாட்டில் பிரச்சினைகளை தோற்றுவிக்கும். எனவே 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்றனர்.

பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக் கூடாது.

பெண்கள் அரசியலில் ஈடுபாடு அற்றவர்கள். எனவே அவர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டிய அவசியமில்லை. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும்போது அது நாட்டில் பல பிரச்சினையை ஏற்படுத்தும் என்றனர்.

இதற்குப் பதிலளித்த டொனமூர் குழுவினர் பெண்கள் அரசியல் ஈடுபாடு அற்றோர் என்பதற்காக அவர்களுக்கான வாக்குரிமையை தடைசெய்ய முடியாது. பெண்கள் நலன் பேணப்பட வேண்டுமாயின் அவர்களுக்கும் கட்டாயமாக வாக்குரிமை வழங்க வேண்டும் என்றனர்.

**சர்வஜன வாக்குரிமை வழங்குவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள்**

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த காலத்தில் இந்திய சுதந்திர போராட்டம் உத்வேகம் அடைந்து காணப்பட்டது. இலங்கை மக்களும் அத்தகையதொரு போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்க அவர்களை அரசியல் நீரோடையில் உள்வாங்கவேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே மக்களை அரசியலின் பால் ஈர்க்க சர்வஜன வாக்குரிமையை வழங்கினர்.

1917ஆம் ஆண்டில் ரஷ்யாவில் ஏற்பட்ட கம்யூனிஸ புரட்சியைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் இடது சாரிகளின் ஆதிக்கம் வலுப்பெறத் தொடங்கியது. இலங்கையில் அதன் தாக்கம் தென்பட்டது. A.E.குணசிங்க இப்போக்கினை பிரதிநிதித்துவப்படுத்திய தீவிரவாதியாக இருந்தார். அவருடைய தொழிற்சங்கத்தில் 40000 மேற்பட்ட தொழிலாளர்கள் இணைந்திருந்தனர். 1922ஆம் ஆண்டில் டறாம் கார் வேலை நிறுத்தத்தில் இலங்கைத்தொழிலாளர்கள் அமோகப் பலத்தினை பெற்றிருந்தனர். குணசிங்கவின் அணுகுமுறையில் பெருமளவான இளைஞர்கள் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். தொடர்ந்தும் இலங்கை வாழ் தொழிலாளர்கள் இத்தகைய "சிகப்பு புரட்சி" போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்க தொழிலாளர்களையும் அரசியலின் பால் ஈர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அனைவருக்குமாக சர்வஜன வாக்குரிமையை வழங்கினர்.

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த வேளையில் பிரித்தானியாவில் தொழிற்கட்சியே ஆட்சியில் இருந்தது. தொழிற் கட்சியினர் ஏகாதிபத்தியவாதக் கொள்கையில் சற்று நெகிழ்ச்சியான தன்மையைக் கொண்டவர்கள். அவர்கள் குடியேற்றவாத மக்களுக்கு சலுகைகள், உரிமைகள் வழங்கப்படவேண்டும் என எண்ணினர்.

அமுக்கத்திற்கு உட்பட்டுள்ள ஜன குழுக்களை அரசியல் ரீதியாக பலப்படுத்தி அவர்தளுக்கு அபிவிருத்தியினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த காலப்பகுதியில் விவசாயிகள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட சாதியினர், மற்றும் வறுமைக்குட்பட்டோர் என பலர் அமுக்கத்திற்கு உட்பட்டிருந்தனர். அவர்களை அரசியல் ரீதியாக பலப்படுத்துவதற்காக சர்வஜன வாக்குரிமையை வழங்கினார்கள்.

இலங்கையில் கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் சமமற்ற அபிவிருத்திதன்மைநிலவியது. டொனமூர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்த மக்கள் பொது பரிபாலனத்தில் காணப்பட்ட இத்தகைய குறைபாடுகளை சுட்டிக்காட்டினர். இத்தகைய முரண்பாடான அபிவிருத்தி தன்மைகளை நீக்கி சமமான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என டொனமூர் குழுவினர் கருதினர்.

மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் மூலம் இலங்கையில் இடம்பெறும் உயர்குழாம் வகுப்பினரின் சில்லோர் ஆட்சியை முடிவுக்குகொண்டு வருதல், மட்டுப்படுத்தப்பட்ட, பரவலாக்கப்படாத வாக்குரிமையின் மூலம் உயர் குழாமினரின் சில்லோராட்சியே வலுப்பெறும் என்பதை சுட்டிக்காட்டி அதன் விளைவாக பொதுமக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவார்களேயன்றி அவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது. எனவே அனைத்து மக்களின் நலனையும் மேம்படுத்துவதற்கான வழி அனைவருக்கும் வாக்குரிமை வழங்குவதே என டொனமூர் குழுவினர் கருதினர்.

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்த காலப்பகுதியில் வடக்கு பிரதேசத்தில் தாழ்ந்த சாதியினராக கருதப்பட்ட சுமார் 70,000 தொடக்கம் 80,000க்கு இடைப்பட்ட மக்கள் எவ்வித விமோசனமும் இன்றி பாதிக்கப்பட்டிருந்தார்கள். டொனமூர் குழுவினர் முன் சாட்சியமளித்த மக்கள் தமது நிலையினைச் சுட்டிக்காட்டினார்கள். டொனமூர் குழுவினர் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் மூலம் அமுக்கத்திற்குள்ளான கீழ் சாதி மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை எனக்கருதியதோடு, அவர்களையும் அரசியல் நீரோடையில் சேர்த்துக்கொண்டால் மாத்திரமே அவர்களுக்கு நன்மை பயக்கும் என கருதி சர்வஜன வாக்குரிமையை வழங்கினார்கள்.

**சர்வஜன வாக்குரிமையின் விளைவுகள்**

1931ஆம் ஆண்டில் தேசிய வாக்குரிமை வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கையில் தர்க்ககரமான அரசியல், சமூக பொருளாதார விளைவுகள் பல ஏற்பட்டன.

**அரசியல் விளைவுகள்**

மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் மூலம் இலங்கையில் மொத்த சனத்தொகையில் 209,997 பேருக்கு மாத்திரமே வாக்குரிமை கிடைக்கப்பெற்றிருந்தது. சர்வஜன வாக்குரிமையைத் தொடர்ந்து இத்தொகை 2,096,256 என்ற ரீதியில் அதிகரித்தது.

மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் மூலம் இலங்கையில் நான்கு சதவீதமானோருக்கு மாத்திரமே வாக்குரிமை கிடைக்கப்பெற்றிருந்தது. இது ஜனநாயகத்திற்கு முரணாகும். இத்தன்மை சர்வஜன வாக்குரிமையால் நிராகரிக்கப்பட்டது.

அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான தளம் இடப்பட்டமை டொனமூர் அரசியல் திட்டத்திற்கமைய அரசியல் கட்சிகள் தேவையற்றன. இங்கு ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக்குழு ஆட்சிமுறை கட்சிகளின் தோற்றத்திற்கு தடையாக அமைந்திருந்த போதிலும் சர்வஜன வாக்குரிமையானது கட்சிகளின் தோற்றத்திற்கு வித்திட்டதோடு, கட்சி வளர்ச்சிக்கும் துணை புரிந்தது.

இதன் விளைவாக இலங்கை சோசலிச சமசமாஜ கட்சி (1935), இந்திய இலங்கை காங்கிரஸ் (1939), கம்னியூச கட்சி (1943), ஐக்கிய தேசியக் கட்சி (1946), தமிழரசுக் கட்சி (1948), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (1951) என்ற ரீதியில் கட்சிகள் தோற்றம் பெற்று இன்று தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 64 கட்சிகளின் தோற்றத்திற்குத் தேசிய வாக்குரிமை காரணமெனலாம்.

சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதற்கு முன் மக்கள் அரசியல் அறிவும் ஈடுபாடும் அற்றவர்களாகவே காணப்பட்டனர். வாக்குரிமையின் பின் மக்களிடையே அரசியல் அறிவும், அரசியல் பங்கேற்பும் அதிகரித்தது. அரசியல் அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள் சர்வஜன வாக்குரிமையில் மக்களுக்கு பொறுப்பு கூறுவதில் பழக்கப்பட்டனர். தாம் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மக்கள் ஆதரவு கிடைக்காது எனக்கருதி மக்களுக்கு பொறுப்புக் கூற தலைப்பட்டனர்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்பட்டனர். தேர்தல் செயல் முறையின்போது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கும், நீக்குவதற்கும் மக்கள் பழக்கப்பட்டனர்.

தொடரும்...

தளபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்

## மட்டக்களப்பு நாவலடி பகுதியில் விபத்து - இருவர் படுகாயம்


மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதி நாவலடிசந்தியில் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இருவரையும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். விடுமுறையின் நிமித்தம் கொழும்பில் இருந்து பாசிக்குடாவுக்கு வந்து. மீண்டும் கொழும்பு பயணித்த குடும்ப உறுப்பினர்கள் பயணித்த வான். சைக்கிளில் வியாபாரத்துக்காக விறகு ஏற்றி வந்த குடும்பஸ்தர் மீது மோதியதனாலயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில். சைக்கிளில் பயணித்த தேவாலய வீதி முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பிள்ளையான் வைரமுத்து (வயது 52) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். வானில் பயணித்தவர்களில் காயமடைந்த ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வானின் சாரதி வாழைச்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 2 நாட்களில் 458 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கடந்த இரண்டு நாட்களில் 458பேர் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகியிருப்பதாக தேசிய வைத்தியசாலை தகவல்கள் குறிப்பிடுகின்றன. இவர்களில் 184 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் திடீர் விபத்துகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆயினும். பண்டிகைக்கால விபத்துகள் குறித்து நோக்கும்போது. கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் 112 திடீர் விபத்துகள் பதிவாகியுள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். பண்டிகைக்காலவிபத்துக்களுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் திடீர் விபத்துக்களின் எண்ணிக்கையில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.



## வவுனியாவில் சுனாமி நினைவு தினம் அனுஸ்டிப்பு

வவுனியா. பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பாக காலை நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்து. இந்நிகழ்வில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன். சிவசக்தி ஆனந்தன். கே.கே.மஸ்தான். வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம். நகரசபை செயலாளர் த.தர்மேந்திரா. தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் மாவட்ட அமைப்பாளர் சி.கோபாலகிருஸ்ணன் உட்பட மத தலைவர்கள். பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி சுடர் ஏற்றியிருந்ததுடன் மலர் மாலை மற்றும் மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை. வவுனியா. ஆலடி பிள்ளையார் ஆலயத்தில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்றதுடன் மோட்ச தீபமும் ஏற்றப்பட்டிருந்தது. இதில். அந்தண சிவாச்சாரியார்கள். பொதுமக்கள். ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி வழிபட்டனர்.

## நெலும்தெனிய விபத்தில் நால்வர் பலி

கொழும்பு கண்டி பிரதான வீதியில் கேகாலை நெலும்தெனிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். வேன் ஒன்றின் மீது ரிப்பர் ரக வாகனமொன்று மோதிய தால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த வர்களுள் இரண்டு பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த விபத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளதோடு அவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கண்டி யிலிருந்து வந்த ரிப்பர் ரக வாகனமொன்று நெலும்தெனிய பகுதி யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேனுடன் மோதியுள்ளதோடு இரண்டு வாகனங்களும் பள்ளத்தில் வீழ்ந்துள்ளன. இதன் காரணமாக வாகனத்தில் இருந்தவர்கள் அங்கு சிக்குண்டிருந்ததோடு இவர்களை மீட்கும் பணிகள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் விபத்தில் சிக்குண்டவர்கள் மீட்கப்பட்டுள்ளதோடு வாகனங்களை எடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். விபத்துக்குள்ளான வேனில் ஏழு பேர் இருந்துள்ளதோடு வேனில் மேலால் ரிப்பர் ரக வாகனம் வீழ்ந்துள்ளதாக எமது செய்திளார் குறிப்பிட்டார். இதன் காரண மாக வேனுக்குள் சிக்குண்டவர்களை மீட்பதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கியதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## செங்கலடியில் தேசிய பாதுகாப்பு தினம்

சுனாமி நினைவு தின நிகழ்வுகள். செங்கலடி பிரதேச செயலகத்தின் தேசிய பாதுகாப்பு தினம் இம்முறை ரமேஸ்புரம் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் திரு உதயசிறிதர் தலைமையில் செங்கலடி ரமேஸ்புரம் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது.

இந்தநிகழ்வில்சுனாமிஅனர்த்தத்தில் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக விசேட பூசைகள் செய்யப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இது குறித்து பிரதேச செயலாளர் திரு.உதயசிறிதர் அவர்கள் கூறுகையில். இலங்கை அரசாங்கம் சுனாமி நினைவு தினத்தை தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தி அதனை சகல மாவட்டங்களிலும் அனுஷ்டித்து வருகின்றது.

இதன்மூலம் இனியொருமுறை இலங்கையில் இவ்வாறான அழிவுகள் ஏற்படக் கூடாது என்பதை அரசாங்கம் நினைவுபடுத்தி வருகின்றது. அனர்த்தங்களை மக்களால் தடுத்துவிட முடியாது. ஆனால் அனர்த்தத்தின் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளமுடியும். எனவேதான் இந்த நாளை தேசிய பாதுகாப்பு தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தி இந்த நாளை மக்கள் மறக்காது விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் எனக் கூறினார். இந்த நிகழ்வில் ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தின் நிர்வாகஉத்தியோகத்தர்சசிதரன்மற்றும்சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலயக் குருக்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டிருந்தனர்.

பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் 27 வருட கடூழிய சிறைத்தண்டனைக்கு உள்ளாகியிருந்த ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. மரபணு பரி சோதனையின் அடிப்படையிலேயே இந்த விடுதலை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் குருநாகலை சேர்ந்த ஒருவருக்கு 2012ஆம் ஆண்டு குருநாகல் மேல்நீதிமன்றம் 27 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்தது.

எனினும் 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் குற்றவாளியாக காணப்பட்டவர் நிரபராதி என்று கடந்த வாரம் அறிவிக்கப்பட்டார்.

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

இனி அரிச்சந்திர மகாராஜன் சுடலை காத்தமைபோல இலங்கைத் தமிழ் மக்களும் சுடலை காக்கும் நிலைக்கு ஆளாகக் கூடாதென்னும் ஆதங்கத்தின்பாற்பட்டு மேற்படி அமெரிக்க பிரதிநிதியின் லக்ஸ்மன் கதிர்காமர் அவர்களின் அமைதி வழி யிலே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க முனையும் மனோ பாவத்தின் பாற்பட்டு கருத்துக்கள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம். தனது தேசத்தினுடைய இலங்கைக்கான உதவிகள் குறித்து அவர் கூறியவையாவன கீழ்வருமாறு அமைகின்றன.

"இலங்கைக்கு நான் பயணம் மேற்கொண்டுள்ள இரு நாள்களில் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நாட்டின் பல பகுதி களையுஞ் சேர்ந்த உள்ளூராட்சி அதிகாரி கள். சமூகங்கள், சிவில் அமைப்புக்கள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை நேரடியாகப் பார்வையிட முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளேன். உங்கள் நாடு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் சாதித்துள்ள விடயங்களால் நான் கவரப்பட்டுள்ளேன்.

அமெரிக்கா உங்களுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் உங்களுடைய முன்னேற்றத்துக்கு உதவுவது குறித்துப் பெருமிதங்கொள்கின்றது.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அமெரிக்காவின் வெளிநாட்டு உதவி இலங்கை மக்களின் அவர்களது சமூகங்களில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

எமது திட்டங்கள் இலங்கையின் பரந்துபட்ட பகுதிகளிலும் பல தரப்பட்ட துறைகளிலும் காணப்படுகின்றன. விவ சாய அபிவிருத்தி. சூழல் மற்றும் இயற்கை வளங்கள். சுகாதாரம். கல்வி. ஜனநாயகம். ஆட்சிமுறை. பொருளாதார வளர்ச்சி மற்றும் மனிதாபிமான உதவி உள்ளிட்ட பல துறைகளில் எமது திட்டங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கூட்டாண்மையென்பது கடந்த ஆறு தசாப்தங்களில் மலேரியா வைக் கட்டுப்படுத்துதல், ரயில் பாதை களை நவீன மயப்படுத்தல், போஷாக்கை அதிகரித்தல் போன்ற பல குறிப்பிடத்தக்க விடயங்களில் சாதித்துள்ளது.

இலங்கையில் பேரழிவை யேற்படுத்திய 2004 சுனாமித் தாக்கத்தின்போது இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு யு.எஸ். எயிட் உதவியது. அறுகம்பைப்பாலம். மீன்பிடித்துறைமுகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள். நீர் விநியோக அமைப்பு முறையென்பவற்றைத் திருத்துவதற்கு உதவியது. அந்தப் பேரிடர்களினால் காவுகொள்ளப்பட்ட உயிர்களையும், அதனால் ஏற்பட்ட நிரந்தர அழிவு களையும் எம்மால் மறக்கமுடியாது. அதேவேளை எதிர்காலத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான உங்க ளது துணிச்சலால் நாங்கள் கவரப்பட்டுள்ளோம்.

இலங்கையின் மோதல்களின்போதும் அதன் பின்னரும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு, உறை விடம், சுகாதாரம் உட்பட அவர்கள் உயிர்வாழ்வதற்கு அவசியமான உதவி களை வழங்கியுள்ளோம்.

அமெரிக்கா தொடர்ந்தும் நீண்டகால முன்னேற்றத்துக்கு அவசியமான விடயங்கள் குறித்துக் கவனஞ்செலுத்தும். நாங்கள் சமநிலை யான பொருளாதார வளர்ச்சி குறித்துக் கவனம் செலுத்துவோம். குறிப்பாகக் குறைந்த அபிவிருத்தியைக்கொண்டுள்ள பிரதேசங்களில் அதிகளவு வேலைவாய்ப்பையும், உயர்ந்த வருமானத்தையும் ஏற்படுத்துவோம்.

நாங்கள் தொடர்ந்தும் கிழக்கின் சமூகங்களுக்கு உதவி வழங்குவோம். நாங்கள் 32பில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

மேற்படி கருத்துக்களையே இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷனோன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவரால் இலங்கையில் தெரிவிக்கப்பட்ட இக்கருத்துக்களில் யுத்தத்தின் பேரிடர்களினால் காவுகொள்ளப்பட்ட உயிர்களையும், அதனால் ஏற்பட்ட நிரந்தரமான அழிவுகளை யும் எம்மால் மறக்கமுடியாது. அதே வேளை எதிர்காலத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான உங் களது துணிச்சலால் நாங்கள் கவரப்பட்டுள்ளோம் என்னும் கருத்தும் சமநிலையான பொருளாதார வளர்ச்சி என்ற கூற்றும் ஒப்புநோக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவேண்டியவையாகவுள்ளன. யுத்தத்தின்போது இந்திய வல்லாதிக்க சக்திகளோடு இணைந்து தனது ஏகாதிபத்திய புதிய உலக மயமாக்கல் என்னும் கோட்பாட்டுக்குத் தீனியாக விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் எதிராக இலங்கை அதிபரும். யுத்தக் கதாநாயகனுமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு பேரு தவி புரிந்து தமிழ் மக்களைக்கொன்று குவிப்பதற்கு உறுதுணையாகவிருந்த அமெரிக்காவின் இராஜாங்கப் பிரதி நிதி அவர்கள் தற்போது இலங்கையில் கால்பதித்துத் தமிழ்த் தலைவர்களோடு கோணநாதப் பெருமானையும் தரிசித்து விட்டுங் கூறியுள்ள கருத்துக்கள் இலங்கையின் ஒட்டுமொத்தத் தமிழினத்தினதும் காதிலே பூச்சுற்றுவது மட்டுமல்லாமல் முழு இலங்கை மக்களினதும் காதிலே பூ சுற்றும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன என்பதே உண்மையாகும்.

எனவேதான் இவ்விடத்தில் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்து சம்பந்தன், சுவாமிநாதன். திருமதி.மகேஸ்வரன், மனோகணே சன், ரவூப்ஹக்கீம் போன்ற ஏகாதிபத்திய அடிவருடிகளைச் சந்தித்து புரளிகளைக் கிளப்பிவிட்டுச் சென்றுகொண்டிருக்கும் அமெரிக்க அரச பிரதிநிதிகளையிட்டு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல அனைத்து மக்களுமே மிகவும் விழிப்புணர்வுடன் இருந்து தம்மையும், தீவையும் ஒருசே ரப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென இடித்துரைக்கவேண்டியவர்களாகவுள் ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சின்னத்திரை தேர்தல் – தலைவரானார் சிவன் சீனிவாசன்



சமீபத்தில் தான் பரபரபரப்பாக நடந்து முடிந்தது நடிகர் சங்கத்தேர்தல். இதனையடுத்து சின்னத்திரை நடிகர் சங்கத்திலும் கடந்த 13ம் திகதி தேர்தல் நடைபெறுவதாகக் கூறப்பட்டது.ஆனால் கனமழை காரணமாக கிறிஸ்துமஸ் தினம் அன்று மாற்றப்பட்டது. 1427 உறுப்பினர்களைக்கொண்ட இந்த தேர்தலில் மூன்று அணிகள் போட்டியிடுகின்றன. தலைவர். துணைத்தலைவர். பொருளாளர் என மொத்தம் 23 பதவிகளுக்காக இந்தத் தேர்தல் நடைபெறுகிறது.

இரவே தேர்தல் முடிவு விபரம் வெளியா கும் என்று கூறப்பட்டது. சிவன் சீனிவாசன் தலைமையில் வசந்தம். பானுபிரகாஷ் தலைமையில் புதிய அலைகள். ரவிவர்மா தலைமையில் உழைக்கும் கரங்கள் என்று மூன்று அணிகள் போட்டியிடுகின்றன.வசந்தம் அணியின் சிவன் சீனிவாசன் 280 ஓட்டுகளுக்கு மேல் எடுத்து தலைவரானார். ரவி வர்மா 205 ஓட்டுக்களும். பானு பிரகாஷ் 180 ஓட்டுக்களும் எடுத்தனர்.

## கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் போட்டு மகனை மகிழ்வித்த நடிகர்



படங்கள் மூலம் பல கோடி ரசிகர்களை மகிழ்விக்கும் நடிகர் அமீர்கான். தனது மகனுக்காக கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் போட்டுள்ளார். அத்தோடு மகன் ஆசாத் மற்றும் அவனது நண்பர்களுக்கும் பரிசுகளை அள்ளி வழங்கினார்.

இதுகுறித்து தனது பேஸ்புக் பக்கத்தில், எங்கள் வீட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் கிறிஸ்துமஸ் விழாவுக்காக சாண்டா கிளாஸ் வேடத்தில் கிறிஸ்துமஸ் தாத்தாவாக நடித்துவிட்டு வந்தேன் என குறிப்பிட்டுள்ளார்.

## ரஜனியின் கபாலி பட ஓடியோ எப்போது?



ரஞ்சித் இயக்கும் கபாலி படத்தின் எதிர்பார்ப்பு மக்களிடையே அதிகமாகிக்கொண்டு வருகிறது. படத்திற்கான படப்பிடிப்பு தற்போது கோவாவில் நடைபெற்று வருகிறது. தெலுங்கில் படம் மஹாதேவ் என்ற பெயரிலும் வெளியாக இருக்கிறது. இப்படத்திற்கான படப்பிடிப்பு ஜனவரியில் முடிந்துவிடும் என்றும் கூறப்படும் அதேவேளை படத்திற்கான ஓடியோ வெளியீட்டு விழா மலேசியாவில் நடைபெறும் என்று கூறப்படுகிறது. மலேசியாவில் ரஜனிக்கு ரசிகர்கள் அதிகம் இருப்பதால் அங்கேயே நடத்த படக்குழுவினர் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## டார்லிங் நாயகியின் டார்லிங் அஜித் தானாம்



தமிழ் சினிமாவில் உச்ச நட்சத்திரமாக விளங்கி வருபவர் நடிகர் அஜித். தல என்றழைக்கப்படும் அஜித்தின் ரசிகர் என பல நடிகர்கள் கூறி வருகின்றனர். அந்த வகையில் டார்லிங் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான நடிகை நிக்கி கல்ராணியும் அஜித் ரசிகை தானாம். இவர் தற்போது பாபி சிம்ஹாவுடன் கோ2 படத்தில் நடித்துள்ளார்.

மேலும் லாரன்சுடன் மொட்ட சிவா கெட்ட சிவா, ஜீவாவுடன் கவலை வேண்டாம், விஷ்ணு நடிக்கும் புதிய படம் என பல படங்களில் நடித்து வருகிறார். வளர்ந்து வரும் நடிகர்களுடன் தொடர்ந்து நடித்து வரும் இவருக்கு அஜித்துடன் ஒரு படத்திலாவது நடிக்கவேண்டும் என்று ஆசையாம். மங்காத்தா, வேதாளம் படத்தை பல தடவை பார்த்துள்ளாராம்.

## எம்ஜிஆர் பாடலை ரீமேக் செய்யும் ஜி.வி.பிரகாஷ்



தமிழ் சினிமாவில் பழைய பாடல்களை ரீமேக் செய்வது வழக்கமாகிவிட்டது. தற்போது ஜிவி. பிரகாசும், சாம் ஆண்டனி இயக்கத்தில் நடிக்க இருக்கும் புதிய படத்தில் ரீமேக் பாடலை அமைக்க இருக்கிறாராம்.

அப்பாடல் எம்.ஜி.ஆர் நடித்த நினைத்ததை முடிப்பவன் படத்தில் இடம்பெற்ற கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும் என்ற பாடலாகும். இந்தப் பாடல் சாம் படத்தில் அறிமுக பாடலாக அமைய இருக்கிறதாம். நா.முத்துக்குமார் இன்றைய கால இளைஞர்களுக்கு ஏற்றாற் போல் வரிகளை அமைக்க, பாபா ஷங்கர் நடனம் அமைக்கிறார்.

## Special 26ல் இணைந்த அனிருத்



பொலிவுட் சினிமாவில் 2013ம் ஆண்டு அக்ஷய் குமார், அனுபம்கேர் நடிப்பில் வெளியான படம் Special 26. ஓபரா ஹவுஸ் திருட்டை மையமாகக்கொண்டு தயாரான இப்படத்தின் தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள ரீமேக் உரிமையை தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர் தியாகராஜன் வாங்கியுள்ளார்.தமிழில் பிரசாந்த் நாயகனாக நடிக்கும் இப்படத்தில் சிம்ரன், தேவயானி சிறப்பு தோற்றத்தில் நடிக்க, பிரபல நாயகி இப்படத்தில் நடிப்பார் என கூறப்படுகிறது. ஜேக்குலின் பெர்னான்டஸ் ஒரு சிறப்பு பாடலுக்கு நடனமாட இருக்கும் இப்படத்தில் அனிருத் இசையமைப்பாளராக ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

## இயக்குனர், தயாரிப்பாளர் அவதாரம் எடுக்கும் விக்ரம்



சென்னை வெள்ளம் இந்த வருடத்தின் மறக்கமுடியாத நிகழ்வாக ஆக்கிவிட்டது. இந்த வெள்ளத்தில் பொதுமக்களுக்கு உதவும் பொருட்டு அனைத்து துறையை சேர்ந்தவர்களும் கொடை வள்ளலாக மாறியதும், திரையுலக பிரபலங்கள் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணத்தை வாரி வழங்கி இருந்தனர்.

இந்நிலையில் சென்னை வெள்ள நிவாரண பணி குறித்து வீடியோ பாடல் ஒன்றை சியான் விக்ரம் தயாரிக்கவுள்ளார். அவரே இயக்க இருக்கும் இந்த வீடியோ பாடலில் கோலிவுட்டின் பிரபல நட்சத்திரங்களும் கலந்து கொள்ள இருக்கின்றனர். விரைவில் இப்பாடல் உருவாக்கப்படும் என்று தெரிகிறது.

## விஜய் மனைவியை பாராட்டிய பிரபல பாடகர்



விஜய்யை பாராட்டிய நிறைய பிரபலங்களை பார்த்திருப்போம். தற்போது விஜயின் மனைவி சங்கீதாவை பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் பாராட்டியுள்ளார். அவர் தனது பேஸ்புக் பக்கத்தில், விஜய் அவரது மனைவி சங்கீதா இருவரையும் விமானத்தில் சந்திக்க நேர்ந்தது. விஜயின் மனைவி சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் தீவிர ரசிகர் என்பதையும் புரிந்துகொண்டேன்.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பாடகர்களின் பெயர்கள் பலரை சங்கீதா நினைவில் வைத்திருந்தது என்னை ஆச்சரியமடைய செய்தது. எலிமினேட் ஆன பாடகர்களின் பெயர்களை கூட சங்கீதா என்னிடம் கூறி அவர்களுடைய திறமையை பற்றி பேசியது என்னை ஆச்சரியத்தின் உச்சத்திற்கே அழைத்து சென்றது என்று பாடகர் ஸ்ரீநிவாஸ் தெரிவித்துள்ளார்.

## சிம்புவை எதிர்க்க இது தான் காரணமா?



சிம்புவுக்கு எதிராக பலர் எதிர்ப்பு காட்டி வந்தாலும், தற்போது சிவசேனா கட்சி தங்கள் ஆதரவினை தெரிவித்துள்ளனர். பீப் பாடல் அதிகாரப்பூர்வமாக வெளியாக வில்லை. அப்படி இருக்க ஏன் சிம்புவை இப்படி துன்புறுத்துகிறார்கள் என்றனர். நடிகர் சங்கத் தலைவர் நாசர் ஒரு முஸ்லீம். இதுவரை கமல் படத்தில் ஆபாசங்கள் இருந்தது இல்லையா? பல படங்களிலும் மோசமான வரிகளில் பாடல்கள் வெளியாகி இருக்கின்றன.

இதுபோன்ற மோசமான விஷயங்களுக்கு குரல் கொடுக்காத பெண் இயக்கம், இதற்கு மட்டும் குரல் கொடுக்கிறார்கள் என்றால் அதற்குக்காரணம் சிம்புவின் குடும்பம் ஒரு ஹிந்து குடும்பம் என்பதால் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

## விஜய் சேதுபதிக்காக விட்டுக்கொடுத்த தமன்னா



சீனுராமசாமி இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்க இருக்கும் தர்மதுரை படத்திற்கு தமன்னா நாயகியாக நடிக்கிறார். இந்த படத்தில் நடிப்பதற்காக தமன்னா பாகுபலியில் வாங்கிய அதே சம்பளத்தை ரூ.1.5 கோடியை கேட்டிருக்கிறார்.

இந்த சம்பள விபரத்தை கேட்ட தயாரிப்பாளர் மிகவுமே அதிர்ந்திருக்கிறார். பின் சீனு ராமசாமி சொன்ன கதை தமன்னாவுக்கு மிகவும் பிடித்துப்போக பாதி சம்பளத்தில் நடிக்க ஒப்புக்கொண்டாராம்.

## சிம்புவை தண்டிக்கும் சட்டம், விஷாலை ஏன் தண்டிக்கவில்லை - வீரலட்சுமி



சிம்புவின் பீப் பாடலுக்கு எதிர்ப்பு வலுத்துக்கொண்டே போகிறது. இந்நிலையில் சிம்புவை தண்டிக்கும் சட்டம் விஷாலை ஏன் தண்டிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழர் முன்னேற்றப்படை நிறுவனத்தலைவர் கி.வீரலட்சுமி.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஆந்திர மாநிலத்தை பூர்வீகமாகக்கொண்ட நடிகர் விஷால் தாழ்த்தப்பட்ட மக்களை கொச்சைப்படுத்தி பேசியபோது பாயாத வன்கொடுமை தடுப்புச்சட்டம, தமிழ் [illegible]ில் தனக்கென்று ஒரு நற்பெயரை தமிழர் அடையாளத்தோடு வைத்திருக்கும் அண்ணன் டி.ஆர். ராஜேந்திரன் மகனுக்கு மட்டும் ஏன் வன்கொடுமை தடுப்புச்சட்டம் வெறித்தனமாக பாய்கிறது. அவர் தமிழன் என்பதாலா? ஒருவேளை சிம்புவை கைதுசெய்தால், அவர் ஜாமீனில் வெளி வரும் போது தமிழர் முன்னேற்றப்படை சார்பாக அவருக்கு சிறை வாசலிலேயே வரவேற்பு கொடுப்பேன். இன்று பெண்ணியத்திற்காக குரல் கொடுக்கும் மாதர் குல மாணிக்கங்களே பெண்கள் என்ற வரையறை இந்தியாவில் இருக்கும் பெண்களை மட்டும் தான் குறிக்குமா? ஈழத்தில் இல்லையா? ஒரு வினாடியாவது கற்பை இழந்த பல்லாயிரம் பெண்களின் கதையை கேளுங்கள். கற்பை காக்க உயிர் தியாகம் செய்த பல்லாயிரம் பெண்களின் கதைகளைப் படியுங்கள். பெண்களின் கண்ணியத்தை பாடல் வரிகள் மட்டும் பாதுகாக்க முடியாது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

*அசின் ஒரு காலத்தில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளிலும் கொடிகட்டிப் பறந்தவர். மைக்ரோமேக்ஸ் செல்போன் நிறுவன உரிமை[illegible] இவருக்கும் திருமணம் நடைபெற இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் பூங்கா



## கடல்

உலகமே உன்னுள் அடக்கம்
தேவர்களும் அசுரர்களும்
உனைக்கடைந்து அமுது
சுவைத்தார்களோ என்னவோ? - ஆனால்
தினமும் உனது சுவையறியா மனிதறில்லை
விதைக்காமல் நித்தமும் அறுவடை
செய்யும் நெய்தல் நில மக்களுக்கு
குறையாத செல்வங்களைத் தரும் - நீ
அட்சய பாத்திரமோ?



## வலித் துளிகள்

நீலம் பூத்த
உன் விழிகளைப் பருகினேன்
விஷம் என்று அறியாமல்

எரிமலை கக்கும்
உன் விழிகளுக்குள்
விழுந்து விட்டேன்
தீய்த்துவிடாதே
கண்ணீராவது விடு

உன் கைவளை சிணுங்கலில்
சுரங்களின் நாட்டியம்
என் பார்வை பட்டதும்
சுருதி தப்பியதோ
அபஸ்வரமாய் ஒலிக்கிறதே

சாரலாய்த் தாவினாய்
சிலிர்த்தது இதயம்
அடித்துத் தாக்கினாய்
மழையாய்
நொறுங்கியது காதல்

என் மந்திர இதழ்கள்
முத்தத் தாளங்களை
வாசித்தது
உன் தபேலா கன்னங்களில்
கனவில்...

## நினைவுகள்

காலம் சில நினைவுகளை
சுமந்துகொண்டு
வேகமாக ஓடுகிறது
அடுத்த மாதம்
மீண்டுமொரு தைப்பொங்கல்
என் நினைவுகளில்
ஏனோ யுத்தகாலம்
ஆம் பால் பொங்குகிறது
அரிசி போட வேண்டும்
பொம்மர் வருமோ?
எனக்குள் ஒரு பயம்
அவளைக் கேட்கிறேன்
"பொம்மர் வந்தால் என்ன
செய்வீர்?"
"பதுங்குகுழி இருக்குத்தானே
பாய்ந்திடுவேன் நாம்
அதற்குள்"
அவள் வார்த்தைகள்
இன்றும் என் காதில்
காலத்தால் நினைவுகள்
அழிவதில்லை...

## காதல் இல்லாத இதயங்கள்

வா
நிம்மதியை தொலைத்து
காதல் வழியே போவோம்

பாவம் காதல்
காதல் இல்லாத இரண்டு
இதயத்துக்கு நடுவில்
தத்தளிக்கிறது

கண்ணீரை
என் கண்ண் கூட
விரும்பவில்லை
வழிந்தோடுகிறது...



## மோக உணர்வு

விழியால் விதைத்து
இதழில் மலரும்
இனம்புரியாத குதூகலிப்பு
கனவுக்கானல் நீரில் நீந்திக்கடந்தேன்
அவள் ஒலிகேட்க
காது மடல்கள் தவமிருக்கும்
உணர்வுகள் உந்தித்தல்ல
உடல் மட்டும் ஏனோ
கல்லாய்ப்போக
உள்ளலை அடிக்க
ஓடாமலே மூச்சுவாங்க
உனதுருவம் எண்ணியதும்
எனதியல்பை இலக்க
உனைக்காண எனைத்தடுக்கும்
எனது இமை மீது கோபம்



## இனிக்கும் என் மொழி

நான் முகவரி தேடி
நடந்துபோன நாட்களில்
என் முகவரியாய்
எனக்குள் வந்தவன் நீ

நான் அன்பைத் தேடி
அலுத்துப்போன நாட்களில்
என் உயிரின் ஆதாரமாய்
எனக்குள் வந்தவன் நீ

எங்கிருந்து வந்தாயோ
தோணாத வார்த்தைகளுக்கெல்லாம்
விளக்கம் தந்தவன் நீ

காணாத காட்சியெல்லாம்
கவிதையாக்கி தந்தவன் நீ

உனைப் பற்றி
எழுத நினைக்கையில்
என் தாய்மொழியும்
இனிக்கிறது
என் தவிப்பும்
இரட்டிப்பாகிறது



## புலம்பெயரும் புலர்கல் பூ


இருளின் துயில்
கலைந்த பின்னும்
நீ
இழுத்துப் போர்த்தி
உறங்கிக்கொண்டிருக்கிறாய்

சாம்பல் மேட்டின்
தெருக்களைக் கிழித்து
தன் சோதியைப் பிளந்து
முகில்களைத் தொட்டு
முத்தமிட்டபடியே
அவன் சிரித்தபடி வருகிறான்
நீ கணக்கெடுக்காமல்
கண்ணுறங்கலாமா ?

சிமிட்டிச் சிமிட்டி வரவேற்று
சிங்காரித்த பூங்காவனங்கள்
புன்னகைப் பன்னீர் தெளித்து
புதுப்பெண்களாய் மலர்ந்து
பூப்பெய்தி விடியல்களை
மலர்த்திக்கொண்டிருக்கிறது

பனித்துளிகள் கூட
பதுங்கியிருந்து
வேடிக்கை பார்க்க
உனக்கென்ன நடந்தது ?
ஏன்
உயிர் இறந்த பூங்கனியாக
உறங்கிக் கிடக்கிறாய் ?

இருளே
துயில் கலைந்து
துயர் களைந்துவிட்டது
இளம் குருத்து வாடலாமா ?
தளிர் மொட்டே எழுந்து வா
இனியவளே புலம்பெயரு
ஒரு புலர்தலுக்கு...!



## என்னால் தாங்க முடியாது

காதல் விடிவெள்ளி
அருகில் மின்மினிகளை
இணைத்து பிரகாசமாய்
இருக்கிறது

உன் இதய சாவியை
தந்துவிடு - இனியும்
என்னால் தாங்கமுடியாது

நீ காதல் ஜுரம்
தொற்றிக்கொண்டே
இருக்கிறாய்
தொல்லை கொடுத்து
கொண்டே இருக்கிறாய்



நீ பார்கிறாயா இல்லை இல்லை
உன் விழிகளால்
என் இதயத்தை
துளையிட்டுக் கொண்டிருக்கிறாய்
இங்கே அது
உடைந்துக் கொண்டிருக்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனுக்கு சகுனியான முதலமைச்சர் விக்னேஸ்வரன்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சித் தலைமையின் அனுமதியைப்பெறாமல் ஓர் அமைப்பை உருவாக்குவதைநாம்விரும்பமாட்டோம். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது. இவ்வாறு கூட்டமைப்பின்தலைவரும்எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழ்மக்கள்பேரவை அமைப்பின் உருவாக்கத்திற்கு இப்போது என்னால் பதிலளிக்கமுடியாது. பொறுத்திருந்துதான் பதில் வழங்குவேன் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அரசியல் தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்கப்போவதாகக் கூறி 'தமிழ் மக்கள் பேரவை' என்ற பெயரில் ஓர் அமைப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குள் உள்ள வடக்குமாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரகசியமான முறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களும் பெருமளவில் கலந்துகொண்டுள்ளனர். இந்த அமைப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதற்காகத் திட்டமிட்டு கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களின் அழுத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது என்று அரசியல் இராஜதந்திரிகளிடமிருந்தும் மற்றும் உள்ளூர், சர்வதேச ஊடகங்களிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தன்எம்.பியிடம்வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு புதிய அமைப்பு ஜனநாயக ரீதியில் உருவாகி செயற்படுவதை எதிர்க்க முடியாது. ஆனால், ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள்கட்சியின் கோட்பாடுகளை மீறி கட்சித் தலைமையின் அனுமதியைப் பெறாமல் தனிப்பட்ட ரீதியில் ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதை கட்சித் தலைமை ஏற்றுக்கொள்ளாது.

அதேமாதிரித்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சித் தலைமைக்கு அறிவிக்காமல் கட்சியின் அனுமதியைப்பெறமால் ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் விரும்பமாட்டோம். இது குழப்பத்திற்கே வழிவகுக்கும். எனினும், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப்பெற்றுக் கொடுப்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியில் பெரிதும் பாடுபட்டு வருகின்றது. தீர்வுக்கான இந்த இலக்கை நாம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

சர்வதேச பிரதிநிதிகளுடனான ஒவ்வொரு சந்திப்புகளின் போதும் இதனை நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம். இந்தச் சந்திப்புகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபைகளின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்களும் பங்கேற்றிருக்கின்றார்கள். நாம் ஓரணியில் நின்று நிரந்தர அரசியல் தீர்வைக்காண விரும்புகின்றோம். இதைக் குழப்பியடிக்க விரும்பவில்லை. குழப்பியடிக்க விரும்புவோர் இதனைக் கவனத்திற்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் உருவாக்கத்திற்கு இப்போது என்னால் பதிலளிக்க முடியாது. பொறுத்திருந்துதான் பதில் வழங்குவேன் என்று கூறியிருக்கும் அவர் இதன் பின்னணியில் யார் செயற்படுகின்றார்கள் என்பதைப் பார்க்கின்றபொழுது வெறுமனே சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர், இன்னும் பல புத்திஜீவிகள் எனக்கூறப்படுகின்றது. கடந்த காலங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோரை இந்தியா தனது தேவைக்காகப் பயன்படுத்திக்கொண்டது. அதுபோல வேறு பல இயக்கங்களையும் பயன்படுத்திக்கொண்டது. இந்தியா வெறுமனே விடுதலைப்புலிகளை நம்பியிருக்கவில்லை. அவ்வாறு எனில் ஒரேயொரு இயக்கத்திற்கு மாத்திரமே பயிற்சி கொடுத்திருப்பார்கள். பூகோள ரீதியாக இலங்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அதன் காரணமாக இந்தியாவின் தலையீடு புராதன காலத்திலிருந்து இந்நாள் வரை தொடர்கின்றது. இந்த ஐக்கியத்தினை சீர்குலைக்க இந்தியரசு ஒருபோதும் இடமளிக்காது.

சீனாவின் தலையீடு இந்நாட்டில் ஓய்ந்திருந்த நிலையில் மஹிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இத்னை அனைவரும் அறிந்தனம் யாவரும் அறிந்ததே. நிலைமைகள் இவ்வாறிருக்க தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இலங்கை அரசிற்கு ஊதுகுழல் என அறிந்துகொண்ட ரோ அதற்கான மாற்று நடவடிக்கைகளை கையாண்டதுடன் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை அனுகியது. என வெளியில் காட்டிக்கொண்டு உள்ளே அவரை ஆதரிக்கத் தொடங்கியது இந்தியா. குறிப்பாக இலங்கையில் பாக்கிஸ்தானது இராணுவத்தளபாடங்கள். சீனாவின் இராணுவத்தளபாடங்கள். ஆயுதங்கள் அதிகமாக இருப்பதனால் இந்தியா தனது வர்த்தக சந்தையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது.

அதுமட்டுமல்லாது நீண்டகாலமாக இராமர் பாலத்தினை அமைக்க திட்டம் தீட்டிவந்த இந்தியாவின் அந்தக் கனவும் சுக்குநூறாகியது. அத்தோடு சீபா ஒப்பந்தம் அதாவது இந்தியாவின் முதலீட்டாளர்கள் இலங்கையில் தமது முதலீடுகளை தங்குதடையின்றிச் செய்வதற்கானதே இவ்வொப்பந்தமாகும். இதில் கைச்சாத்திட இலங்கையரசு மறுத்துள்ளது. இதனால் இந்தியா தனது வர்த்தகத்துறையில் இலங்கையுடனான நட்புறவில் பகைமையும் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது கடனடிப்படையில் புகையிரதத்தினையும் வழங்கவிருந்தது. அதனையும் இலங்கையரசு நிறுத்தியுள்ளது. இந்தியாவினது தலையீட்டினை இலங்கையில் தவிர்த்துக்கொள்வதற்காக இதனை நன்கு அறிந்துகொண்ட இந்தியரசு வேண்டுமென்றே மீண்டுமொரு குழப்பத்தினை தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தி ஒன்றிணைந்து காணப்பட்ட த.தே.கூட்டமைப்பையும், வடமாகாணசபையினையும் பிரித்தாளும் நடவடிக்கையில் ஈடுபட்டது. தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இதர கட்சிகளையும் பயன்படுத்துவது வழமையானதொன்றே. அவ்வாறானதொரு நிலைப்பாட்டினையே இன்றும் இலங்கையரசாங்கம் செய்து வருகின்றது. தமிழர் பேரவையின் உருவாக்கம் என்பது சாதாரணமாக நினைத்து விட்டுப்போகமுடியாது. அடுத்தகட்ட அரசியல் காய்நகர்த்தல்களை நகர்த்துவதற்கான அடிப்படையையே வலியுறுத்தி நிற்கின்றது. இதற்கு மக்கள் மத்தியில் பிரசித்திபெற்ற ஒருவரே இந்தியாவிற்குத் தேவைப்பட்டது. தமிழினத்தின் தலை என வர்ணிக்கப்படுகின்ற யாழ் மக்களையும் அங்கு இயங்கி வருகின்ற வடமாகாணசபையினையும் தமது அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் தாம் நினைத்ததை சாதித்துக்கொள்ள இயலும் என்கின்ற நிலைப்பாட்டில் இந்தியா முடிவுகளை மேற்கொண்டுள்ளது. பாக்கிஸ்தானிடமிருந்து இராணுவத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டதைக் கண்டித்து இலங்கையரசிற்கு ஒரு எச்சரிக்கையினையும் விடுத்துள்ளது இந்தியரசு.

இரா.சம்பந்தனைப் பொறுத்தவரையிலும் தற்போதைய நிலைப்பாட்டின்படி ஒன்றிணைந்த இலங்கைக்குள் ஒரு சமாதானத் தீர்வினை எதிர்பார்க்கின்றார். இனப்படுகொலை பற்றிப் பேசுவதைவிடுத்து அதற்கு மாற்றீடாக போர்க்குற்றம் தொடர்பாக விசாரிக்கப்படவேண்டும் என்ற வாசகத்தினையே முன்வைக்கின்றார். இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களும் இரா.சம்பந்தனுடன் இணைந்து செயற்படுகின்றார். தற்போதிருக்கக்கூடிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கட்டமைப்புக்களை சீர்குலைப்பதன் ஊடாகவே இந்திய அரசாங்கம் தனது அரசியலை இலங்கையில் நிலைநிறுத்த இயலும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. பதவி ஆசனங்களுக்காக ஆசைப்படும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை நம்புவது பயனற்றது என்பதும் மற்றொரு காரணமாகும்.

இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் பல்வேறு உரிமைச் சட்டங்களை இலங்கையில் அமுல்படுத்தியது. இதனால் சிறுபான்மை இனத்திற்கு நன்மை எதுவும் ஏற்படவில்லை. 1948ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இதில் மலையகத்தினைச் சேர்ந்த மக்கள் பெரும் பாதிப்படைந்திருந்தனர். 1949ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம். 1956ஆம் ஆண்டு அரச கருமமொழிச் சிங்களச் சட்டம். 1958ஆம் ஆண்டு ஸ்ரீ எழுத்துச்சட்டம். 1967 சிறிமா சாஸ்திர ஒப்பந்த அமுலாக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சிறுபான்மையினத்துக்காக 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் நலன் பேணப்படும் எந்தவொரு விடயங்களும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 11 விடயங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது. மக்கள் இறையாண்மை, அரச கொள்கை வழிகாட்டல் கோட்பாடு, அடிப்படை உரிமைகள், தேசிய அரசுப்பேரவை, அரசியல் அமைப்பு நீதிமன்றம், அமைச்சரவை, பொதுச்சேவை ஆலோசணைச்சபை, பொதுச்சேவை ஒழுக்காற்றுச்சபை, நீதிச்சேவை ஆலோசணைச்சபை, நீதிச்சேவை ஒழுக்காற்றுச்சபை, மொழியும் மதமும் இவையணைத்தும் ஆரம்பகட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் இதனால் தமிழினத்திற்கு கிடைத்த பெறுபேறுகள் என்ன என்பதைப் பார்க்கும்போது அவையணைத்தும் பூச்சியம் என்பதே உண்மையாகும். 1972ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களுக்கான உரிமைகள் கிடைக்கப்பெறவில்லை என்றால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எதிர்க்கட்சிப் பதவியின் அர்த்தம் என்ன? என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. ஆகவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியலில் அனுபவமற்றவர். வெறுமனே' அவருக்கு இனப்படுகொலை பற்றிக் கூறுகின்றபோது அதனை அவர் செவிமடுத்து அதற்கேற்ற பாதையில் செல்லக்கூடிய ஒரு இயல்புடையவரே. இலங்கையின் போராட்ட வரலாறு என்பது இவருக்குத் தெரியாது. ஆகவே இதுவரை நடைபெற்ற பிரச்சினைகளைக்கொண்டு அதற்கான தீர்வினை தமிழினத்திற்கு பெற்றுக்கொடுக்கவேண்டும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சி இதுவரைகாலமும் நடாத்திய அரசியலில் பெற்றுக்கொடுத்த தீர்வுகள் என்ன என்கின்ற விடயத்தினை விக்னேஸ்வரனுக்குத் தெரியப்படுத்தி இதில் உள்ள உண்மைகள் தெளிவுபடுத்தப்படவேண்டும். ஆகவே மக்கள் பார்வையில் இவரது நடவடிக்கைகள் சரி என்றே கொள்ளப்படும். அவ்வாறானதொரு விடயத்தினையே இந்தியரசும் கையிலெடுத்துள்ளது. எதிர்க்கட்சிப்பதவியில் இருந்துகொண்டு இனப்படுகொலைக்கு தீர்வுகாண முடியாது என்பதை வடமாகாண சபையின் முதலமைச்சர் ஊடாகவே கூறவைத்து. அதனோடு தனது தந்திரோபாய அரசியலை நகர்த்துவதற்கான திட்டமொன்றாகவே இந்த தமிழர் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பத்திலேயே கிள்ளியெறியத் தவறினால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெரும் ஆபத்தினை சந்திக்க நேரிடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**நெற்றிப்பொறியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை. அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலக பந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான். காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர். எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன். அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும். கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார். பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்தவேண்டும். அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும். முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும். அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும். எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

இப்பிரதிநிதி அமெரிக்காவினுடைய பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச்செயலாளராகவுங் கடமையாற்றுகின்றமையால் அன்னாரின் படைத் தளபதிகளுடனான சந்திப்பும் அச்சந்திப்பின்போது அவரால் பரிமாறப்பட்ட ஸ்ரீலங்காப் படைவீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தனது நாட்டில் பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்பான விடயமும் எவ்வாறான பெறுபேறுகளைத் தோற்றுவிக்குமென்பதையும் நாட்டு நலனிலும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பிலும் அக்கறையுள்ள சகலரினதும் உடனடி அறவழி அமைந்த சுட்டிக்காட்டலாகவும் இருக்கவேண்டும்.

ஸ்ரீலங்காவின் படைவீரர்களுக்கும், படை அதிகாரிகளுக்கும் தனது தேசத்தில் பயிற்சியளிப்பது தொடர்பில் பிரஸ்தாபித்த மேற்படி அமெரிக்கப் பிரதிநிதியான கலாநிதி அமி சீரைட் அவர்களின் கூற்று நிதர்சனமாக்கப்படுமானால் இலங்கைத் தமிழினத்தின் விடுதலைக்காக என்றைக்குமே எவருமே போராடமுடியாத அவலநிலை உருவாகுவதோடு தொழிலாளர் விமோசனத்துக்கான போராட்டங்களையும் முன்னெடுக்க முடியாத நிலையே தோன்றும். மேலும் தமிழ் இளையோரைப் பயங்கரவாதிகள் எனப் பொருளற்று விமர்சனஞ் செய்து அவர்களைத் தொடர்ந்தும் வேட்டையாடுவதற்கும் தொழிலாளர் விமோசனந் தொடர்பிலான போராளிகளையும் அவ்வாறே அரசானது பூண்டோடு நசுக்குவதற்கும் வழிவகுக்கும்.

ஆகவே அமி சீரைட் அவர்களுடைய மேற்படி திட்டத்திலுள்ள ஆபத்தைப் புதிய தமிழர் தலைவரும் மேதகு எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் அவர்களும் மாண்புமிகு வட மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், திருமதி.மகேஸ்வரன், மனோ கணேசன் ஆகியோரும் கௌரவ.முஜிபர் ரஹ்மான் போன்ற ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொண்டு அம்பலப்படுத்த வேண்டுமென்னும் ஆதங்கம் சிந்திக்கத் தெரிந்த சகலரிடமுள்ளபோதும், அவர்கள் ஒருபோதும் அம்பலப்படுத்த முன்வரமாட்டார்களென்பதே பேருண்மையாகும். ஏனெனில் அவர்கள் தமதும் தமது வர்க்கத்தினரதும் சர்வதேசியளவிலான பொருளியல் தேவைகளுக்குத் தம்மை என்றைக்கோ சோற்றுப் பிண்டங்களாக்கியுள்ள கனவான்களாவார்கள்.

இப்பிரதிநிதிகளின் வருகையோடு மட்டும் நின்றுவிடாமல் 20.12.2015 அதிகாலை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிறப்புச் செய்தியுடன் அமெரிக்கத் திணைக்களத்தின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கான நான்காவது பயணமாகக் கொழும்பை வந்தடைந்திருக்கின்றார். அன்னாரினால் எடுத்துவரப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி அவர்களின் சிறப்புச் செய்தி எதுவாகவிருந்தாலுங்கூட அது இலங்கைக்கோ அல்லது இலங்கைத் தமிழ் மக்களுக்கோ நன்மையளிக்கக் கூடியவொன்றாகவிருக்குமென்பது அசாத்தியமானதே.

இலங்கை வந்துள்ள நிஷா பிஸ்வால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய முன்னிய அரச உயர்மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தியுமுள்ளார்.

'முற்கூட்டியே அறிவிக்கப்படாத நிலையில் தொடர்ச்சியான அமெரிக்கப் பிரதிநிதிகளின் இலங்கை வருகையின் ஒரு பிரதான அங்கமாக மேற்படி அமெரிக்கப் பிரதிநிதி நான்காவது முறையாக ஜனாதிபதி ஒபாமா அவர்களின் சிறப்புச் செய்தியுடன் இலங்கைக்கு வருகை தந்திருப்பது ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையரசு மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் அது தொடர்பில் அமெரிக்கப்பிரதிநிதி இலங்கை ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கேள்வியெழுப்புவாரெனக் கூறப்படுகின்றபோதும் அவ்வாறு அவர் கேள்வியெழுப்பினாலுங்கூட அக்கேள்வியானது இலங்கைத் தமிழ் மக்களின் விமோசனந் தொடர்பில் பூச்சியத்தன்மைவாய்ந்தவொன்றாகவே இருக்குமென்னும் பேருண்மையை இடித்துரைத்து அமெரிக்காவின் இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தின் வேட்டைக்காடாக விளங்கிய வியட்நாமைப்போன்று இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முத்து எனப் பெருமையுடன் விபரிக்கப்படும் மாம்பழத் தீவான இலங்கையும் அந்த ஏகாதிபத்திய வல்லரசின் வேட்டைக்காடாக விளங்கும் சாபக்கேட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டுமென மீண்டும் ஒருமுறை தேசபக்தர்களையும் தமிழ் உணர்வாளர்களையும் அறைகூவி அழைக்கின்றோம்.

எனவே அமெரிக்காவின் இக்கபளீகர எத்தனங்கள் நாட்டைப் பெருமளவில் ஆட்கொண்டிருக்கின்ற அவலஞ் சூழ்ந்த இந்நிலையில் மேற்றரப்பட்ட தரப்புக்களும் ஐ.தே.க ஆட்சியதிகாரமும் அமெரிக்காவின் கபளீகர முன்முயற்சிகளுக்கு அனுசரணையாக விளங்கிக் காட்டிக்கொடுப்பவையாக விளங்குமேயொழிய ஒருபோதும் தடுத்து நிறுத்தமாட்டா.

ஆகையால் அமெரிக்காவின் இலங்கை மீதான தற்போதைய அடாவடிகளைத் தடுத்து நிறுத்தத் தேசத்தின் அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து சகல மக்கள் சமூகங்களையும் உள்ளடக்கிய வெகுஜனப்போராட்டங்களை இலங்கை முழுவதும் தொடர்ச்சியான அமெரிக்கப் பிரதிநிதிகளின் வருகையை எதிர்த்து முன்னெடுக்க உடன் முன்வரவேண்டும். மேலும் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலய முன்றலில் பேரணி நகர்த்தி அத்தேசத்தின் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் சூழ்ச்சி வலையைக் கிழித்தெறிந்து தேசத்தையும், தேசத்திலே வதியும் சிறுபான்மையினங்களையும் ஒருசேரப் பாதுகாப்பதற்குத் திரள் திரளாகத் திரளவும் வேண்டும்.

## நபிமொழிகள்

செல்வ வளம் என்பது அதிகமா[illegible] பெறுவதல்ல. போதுமென்ற மனதை பெறு[illegible] உண்மையான செல்வமாகும். இறைவன் யாருக்கு நல்லவை நாடுகிறானோ அவனுக்கு மார்க்கத்தில் விளக்கத்தை அளிப்பான்.

நம் சிறுவர்களிடம் மரியாதை காட்டாதவனும், பெரியோர்களுக்கு மரியாதை செய்யாதவனும் நம்மை சார்ந்தவனல்ல. உன் சகோதரனின் துன்பத்தைக்கண்டு மகிழ்ச்சியை வெளிப் படுத்தாதே. இறைவன் அவன் மீது கருணை புரிந்து உன்னை துன்பத்தில் ஆழ்த்திடுவான்.

ஒரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களின் பேரக்குழந்தைகளில் ஒருவரைச் சுமந்தவாறு மக்ரிப் அல்லது இஷா தொழுகைக்கு வந்தார்கள். குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு தொழுகையைத் தொடங்கினார்கள். அவர்கள் சஜ்தாவுக்குச் சென்றதும் நீண்டநேரம் அதே நிலையிலேயே இருந்திடவே நான் சற்று என் தலையைத்தூக்கி எட்டிப் பார்த்தேன். பேரக்குழந்தை நபியவர்கள் முதுகில் அமர்ந்திருந்தது! நான் மீண்டும் சஜ்தாவுக்குச் சென்றுவிட்டேன்.

தொழுகை முடிந்ததும் நபித்தோழர்கள் கேட்டார்கள்: யா ரசூலுல்லாஹ்! தாங்கள் நீண்டநேரம் சஜ்தாவில் இருந்திடவே ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதோ அல்லது தங்களுக்கு வஹி வரத் தொடங்கிவிட்டதோ என்று நாங்கள் நினைத்துவிட்டோம் என்றார்கள். நபியவர்கள் சொன்னார்கள்: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எனது பேரன் என் முதுகில் அமர்ந்துவிட்டார். அவரது மகிழ்ச்சியைக்கெடுத்து விட நான் விரும்பவில்லை!

நூல்: அன் நசயீ, அஹ்மது, அல் ஹாக்கிம்.

"ஒருவருக்கொருவர் கோபம் கொள்ளாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். பிணங்கிக் கொள்ளாதீர்கள். (மாறாக,) அல்லாஹ்வின் [illegible]யார்களே! (அன்பு பாராட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். எந்தவொரு முஸ்லிமும் தம் சகோதரருடன் மூன்று நாள்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்: புஹாரி

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி).

"உங்களில் சிறந்தவர்கள் தங்கள் மனைவியரிடம் நல்லபடி நடந்து கொள்பவர்களே" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்கள்: அஹ்மத், [illegible]

அறிவிப்பவர்: அபூ[illegible] (ரலி)

"நீண்டநேரம் [illegible] தொழுகை நடத்தும் எண்ணத்துடன் நான் தொழுகையைத் துவக்குகிறேன். அப்போது குழந்தையின் அழு குரலை கேட்கிறேன். (எனக்குப்பின்னால் தொழுதுகொண்டிருக்கும்) அந்தக்குழந்தையின் தாயாருக்குச் சிரமமளிக்கக்கூடாது என்பதனால் தொழுகையைச் சுருக்கமாக முடித்துவிடுகிறேன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபு கதாதா (ரலி) அவர்கள்.

நூல் : புகாரி.

நபி(ஸல்) அவர்கள், 'கன்னித்தன்மை இழந்த பெண்ணை, அவளுடைய உத்தரவு பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம். கன்னிப் பெண்ணிடம் அனுமதி பெறாமல் மணமுடித்துக்கொடுக்க வேண்டாம்' என்று கூறினார்கள். [illegible] மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! (கன்னிப்பெண் வெட்கப்படுவாளே) எப்படி கன்னியின் அனுமதி(யைத் தெரிந்து கொள்வது)" என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், 'அவள் மௌனம் சாதிப்பதே (அவளுடைய சம்மதம்)' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி) அவர்கள்.

நூல் : புகாரி

## கிறிஸ்துவின் பிறப்பு கூறும் நற்செய்தி

உலக முடிவு பரியந்தம் உங்களோடிருப்பேன் என உறுதியளித்த இறைவன் அந்த உறுதி மொழியை நிறைவேற்ற மக்கள் மனங்களில் கூடாரம் அமைத்த நாள் கிறிஸ்மஸ் பண்டிகையாகும். ஆசை, சுயநலம், எதிர்பார்ப்புகள் நிறைவேறாததால் மனிதனை மனிதன் அழித்து பிறரன்பைச் சிதைக்கின்ற காலமாக இக்காலத்தைப்பார்க்க முடிகிறது. இயற்கை அழிவுகள், நாடுகளின் யுத்தங்கள் என அழிவுகளின் தகவல்களையே அன்றாடம் கேட்கும் பார்க்கும் காலமொன்றிலேயே இம்முறை கிறிஸ்து பிறப்புத்திருநாள் கொண்டாடப்படுகிறது. 'உங்களுக்குச் சமாதானம்' என ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் சமாதானத்தையும் அமைதியையும் அந்த இயேசு' சமாதானம் செய்வோர் பாக்கியவான்கள்' என அருள் மொழிந்தார். அந்த உண்மையான சமாதானம் நம் உள்ளங்களில் எப்போதும் நிலைத்திருக்கின்றதா? அந்த சமாதானத்தைப் பகிர்வதில் மனிதர்கள் தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகிறார்களா? என்றால் இவற்றுக்குப் பதில் இல்லை தான்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய முன் அறிவிப்பை பரிசுத்த வேதாகமத்தின் மீகா நூல் இவ்வாறு தெரிவிக்கிறது. பெத்லகேமே யூதாவின் குடும்பங்களுக்குள் நீ மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும் இஸ்ராயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்.

அவர் தோன்றும் வழி மரபோ ஊழி ஊழிக்காலமாய் உள்ளதாகும். ஆதலால் பேறுகால வேதனையில் இருப்பவன் பிள்ளை பெறும்வரை அவர் அவர்களைக் கைவிட்டு விடுவார். அதன் பின்னர் அவரது இனத்தாருள் எஞ்சியிருப்போர் இஸ்ராயேல் மக்களிடம் திரும்பி வருவார்கள். அவர் வரும்போது ஆண்டவரின் வலிமையோடும் நம் கடவுளாகிய ஆண்டவரின் மாட்சியோடும் விளங்கித் தம் மந்தையை மேய்ப்பார். அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள். ஏனெனில் உலகின் இறுதி எல்லைகள் வரை அப்போது அவர் மேன்மை பொருந்தியவராய் விளங்குவார். அவர் அமைதியை அருள்வார்.

எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. கடவுளே உம் திருவுளத்தை நிறைவேற்ற நான் வருகிறேன்' திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் நீர் பலிகளை விரும்புவதில்லை என்ற இயேசு ஒரே ஒருமுறை தம் உடலைப்பலியாகச் செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்


## உலகின் முதலாவது இணையத்தளத்திற்கு வயது 25



இன்று உலகே சுருங்கி ஒரு கிராமம்போல் தோற்றமளிப்பதற்கு இணையத்தளம் முக்கிய காரணமாக விளங்குகின்றது. இவ்வாறான இணையத்தளத்தினை முதன் முதலில் ரிம் பேர்னர்ஸ் லீ (Tim Berners-Lee) என்பவர் அறிமுகம் செய்திருந்தார். அதாவது சுவிட்ஸர்லாந்தில் உள்ள CERN எனும் ஆய்வு மையத்தில் பணிபுரிந்த இவர் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதன் முதலாக World Wide Web (WWW) எனும் நெறிமுறையை அறிமுகம் செய்து தற்போதைய இணையத்தளங்களுக்கு அடித்தளமிட்டிருந்தார்.

இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது உலகெங்கிலும் சுமார் 4 பில்லியன் வரையான இணையத்தளங்கள் அல்லது இணைய பக்கங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## ஒளி ஊடுபுகவிடும் புதிய உலோகத்தில் தொடுதிரைகள்



தற்போதைய உலகை ஆளும் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தில் நாளுக்கு நாள் பல்வேறு புதிய நுட்பங்கள் புகுத்தப்பட்டுவருகின்ற. இவற்றின் தொடர்ச்சியாக ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் ஸ்மார்ட் தொலைக்காட்சிகள் என்பவற்றின் திரைகளை வடிவமைப்பதற்கு ஒளி ஊடுபுகவிடும் உலோகம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஒளி ஊடுபுகவிடும் உலோகம் ஆனது தற்போதைய திரைகளினை விடவும் 5 சதவீதம் உற்பத்தி செலவு குறைந்ததாகவும், அதேநேரம் உறுதியானதாகவும் இருக்கும் என குறித்த ஆராய்ச்சியாளர் குழு தெரிவித்துள்ளது. தற்போது ஸ்மார்ட் சாதனங்களின் திரைகள் இன்டியம் ரின் ஒக்சைட் (Indium Tin Oxide - ITO) எனும் சேர்வையினால் உருவாக்கப்படுகின்றதாகவும். இவற்றின் விலை அதிகம் எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.


## Axon Max ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகம்



ZTE நிறுவனம் 16 Mega pixel பின்புற கெமரா வசதிகொண்ட Axon Max Smart phoneஐ அறிமுகப்படுத்தியுள்ளது. Dual Sim ஆதரவுகொண்ட ZTE Axon Max Smartphoneஇல் MiFavor 3.5 UI அடிப்படையிலான Android 5.1 Lolipop இயங்குகிறது. ZTE Axon Max Smart phone 367ppi Pixel அடர்த்தி மற்றும் 1080x1920 Pixel Resolution கொண்ட 6.0 Inch KO HD Amoled Display இடம்பெறுகிறது.

மைக்ரோ SD அட்டை வழியாக 128 GBவரை விரிவாக்கக்கூடிய 32GB உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது. LED fash கொண்ட 16 Mega pixel பின்புற கெமரா மற்றும் f/2.2 2 அபெர்ச்சர் கொண்ட 13 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கெமரா வசதியும் உள்ளது.

## அழகாக வானிலை அறிக்கை வாசிக்கும் பெண் ரோபோ



சீனாவில் பிரபல தொலைக்காட்சி சேனலில் பெண் ரோபோ ஒன்று நிகழ்ச்சி தொகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது. சீனாவில் பிரபலமான டிவி சேனல்களில் ஒன்று Shanghai Dragon TV. இந்த சேனலில் முதன்முறையாக செயற்கை அறிவு கொண்ட பெண் ரோபோ ஒன்று நிகழ்ச்சி தொகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ரோபோவானது. Xi aolce என்னும் Smart Cloud மற்றும் Big Data Software யை கொண்டு இயங்குகிறது. அழகான பெண் குரலில் வானிலை அறிவிப்புகளை மனிதர்களை போலவே துல்லியமாக ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கிறது. இது பெரும்பாலான நேயர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமன்றி அவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

## சம்சுங் நிறுவனம் அறிமுகம் செய்த Galxy A9 Smartphone

சம்சுங் நிறுவனம் Galxy A9 Smartphone ஐ சீனாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. DualSim ஆதரவுகொண்ட Samsung Galaxy A9 Smartphone, android 5.1.1 Lolipop வசதியுடன் இயங்குகிறது. மேலும், 367ppi Pixel அடர்த்தி மற்றும் 1080x1920 Pixel Resolution கொண்ட 6.0 Inch KO HD சூப்பர் Amoled உடன் 2.5D வளைந்த Glass Dispaly இடம்பெறுகிறது. இதில், Adreno 510 GBU மற்றும் 3GB Ram உள்ளது. இதில் மைக்ரோ SD அட்டை வழியாக 128GB வரை விரிவாக்கக்கூடிய 32GB உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது. Optical Image Stabilization (OIS) மற்றும் LED Flash கொண்ட 13 Megapixel பின்புற Autofocus Camera மற்றும் Selfie Mode, Portrait Mode போன்ற சில குறிப்பிட்ட Mods கொண்ட 8 Megapixel முன் எதிர்கொள்ளும் Camera கொண்டுள்ளது. இந்த கைப்பேசியின் சிறப்பம்சமாக Fast Charge 2.0 Tech ஆதரவுகொண்ட 4000mAh Battery திறன் மூலம் இயக்கப்படுகிறது. மேலும் பல வசதிகளாக, Wi-Fi, GPS/AGPS, Bluetooth 4.1, Beidou, NFC, Wi-Fi Direct 3G, 4G LDE, GSM, FM Radio மற்றும் Micro Usb 2.0 போன்றவற்றை வழங்குகிறது.




## ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் Falcon 9 Rocket தரையிறக்கம்



விண்வெளி பயணத்தை முடித்த பின்னர் ரொக்கெட்டை மீண்டும் தரையில் பாதுகாப்பாக இறக்கும் சாதனையை தனியார் நிறுவனமான விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் ஸ்பேஸ்-ஒ படைத்துள்ளது. 75மைல் உயரத்தில் மணிக்கு 600மைல்கள் வேகத்தில் பரந்துகொண்டிருந்த ரொக்கெட் தனது அதிசயத்தை ஆரம்பித்தது. ரொக்கெட்டின் முன்பகுதி பிரிந்து விண்ணுக்கு ஏவப்பட்டது. அதன் ஃபால்கன்-9 கலம் செங்குத்தாக தரையிறக்கப்பட்டது.

ரொக்கெட்டுக்களை மீளவும் பயன்படுத்துவதற்கான திட்டத்தில் இது ஒருபெரிய முன்னேற்றமாகும். விண்வெளி சுற்றுலாவுக்கான திசையில் மேலும் எம்மை அது முன் நகர்த்தியுள்ளது.

## ஐஸ் கட்டிகளைத் தானாகவே உருக்கும் வீதி



குளிர் பிரதேசங்களில் உள்ள வீதிகளில் படியும் ஐஸ் கட்டிகளினால் அதிகளவு வீதி விபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது. இதற்கு ஒரு தீர்வாக தானாகவே ஐஸ் கட்டிகளை உருகச் செய்யும் வீதிகளை அமைப்பதற்குரிய தொழில்நுட்பம் ஒன்றினை துருக்கியிலுள்ள முழ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இதற்காக விசேட பதார்த்தம் (Material) ஒன்றினை Styrene-Butadiene-Styrene எனும் பொலிமர் மற்றும் தார் என்பவற்றின் கலவையாக தயாரித்துள்ளனர்.

இக் கலவை ஐஸ் கட்டிகளை கரைக்கும் உப்பு தன்மையான பதார்த்தம் ஒன்றினை வெளிவிடுவதாகவும், வாகனாங்கள் செல்லும்போது நிலத்தின் கீழாக அமுக்கம் ஏற்படுவதனால் இப் பதார்த்தம் பரந்து வீதியின் மேற்பரப்பிலுள்ள ஐஸ் கட்டிகளை உருக வைப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இப்புதிய பதார்த்தம் பல வருடங்களுக்கு பழுதுபடாமல் இருப்பதனால் குறுகிய காலத்தில் மீண்டும் மீண்டும் வீதிகளை செப்பனிடவேண்டிய அவசியம் இல்லை என மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## கற்பூரவல்லி இலைக்கு இவ்வளவு மருத்துவ குணங்களா?



கற்பூரவல்லி ஒரு சிறந்த கிருமி நாசினியாகும். இதனால்தான் நம் முன்னோர்கள் வீட்டின் முன்புறம் துளசியுடன் கற்பூர வல்லியும் நட்டு வளர்த்தனர். இரண்டும் விஷக் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. கற்பூரவல்லியை தென்னை மரத்தைச் சுற்றி நட்டு வைத்தால் எந்த வகையான பூச்சிகளும் தென்னையைத் தாக்காது. கற்ப மூலிகையில் கற்பூரவல்லிக்கு சிறந்த இடமுண்டு. இதனால்தான் இதன் பெயரும் கூட கற்பூர வல்லி என்று அழைக்கப்படுகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற மருந்தாக கற்பூரவல்லி அமைகிறது.

இந்தியாவில் தமிழகம் கேரளா, கர்நாடகா பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது. இதன் இலை வட்ட வடிவமாக பஞ்சு போன்று காணப்படும். இதில் காரத்தன்மை கொண்ட நீர்ச்சத்து நிறைந்துள்ளது. கற்பூரவல்லி இலைகளை காயவைத்து பொடி செய்து அதனுடன் காய்ந்த தூதுவளை, துளசி பொடிகளை சம அளவு எடுத்து புட்டியில் அடைத்து வைத்துக்கொண்டு தினமும் காலை வேளையில் குழந்தைகளுக்கு ஒரு சிறு தேக்கரண்டி அளவு தேனில் குழைத்து ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் கொடுத்து வந்தால், குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல், சளி போன்றவை நீங்கும். சளியின் அபகாரம் குறையும்.

கற்பூர வல்லி இலையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி அதனுடன் காய்ந்த வேப்பிலை, வில்வம், அத்தி இலை, துளசி இலை, தும்பை இலை, தூதுவளை, ஆடாதோடை, நெல்லி, கீழாநெல்லி இவற்றை சம அளவு எடுத்து அதனுடன் சுக்கு, மிளகு, மஞ்சள்தூள், தனியா பொடி கலந்து ஒரு போத்தலில் அடைத்து வைத்துக்கொண்டு தினமும் மூன்று வேளையும் வேளைக்கு இரண்டு ஸ்பூன் அளவு எடுத்து நீரில் கொதிக்க வைத்து அருந்தி வரவேண்டும். இவ்வாறு அருந்தி வந்தால், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். மூச்சுக் கிளைக்குழல்களில் தொற்றுநோய்களின் தாக்குதல் ஏதுமின்றி பாதுகாக்கும்.

சுருங்கியுள்ள மூச்சுக்குழல்களை விரிவடையச்செய்து சீராக செயற்பட வைக்கும். ஆஸ்துமாவுக்கு இது நல்ல மருந்து. குழந்தைகளுக்கு உண்டான மார்புச்சளி நீங்க சிறு குழந்தைகளுக்கு மார்பில் சளி கட்டிக்கொண்டு இறுகிப்போயிருக்கும். இதனால், குழந்தைகளுக்கு அடிக்கடி மூச்சு விட முடியாமல் திணறுவார்கள். சில சமயங்களில் இது ஆஸ்துமா, காச நோயாககூட மாறநேரிடும். இவர்களுக்கு கற்பூரவல்லி இலையையும், துளசி இலையையும் சம அளவு எடுத்து சுத்தம் செய்து, லேசாக வதக்கி சாறு எடுத்து, 5 மி.கி. அளவு தினமும் காலை வேளையில் கொடுத்து வந்தால், மார்புச்சளி அறவே நீங்கும்.

கற்பூரவல்லி இலை, தூதுவளை, வல்லாரை, இவற்றை சம அளவு எடுத்து பொடியாக்கி அதில் 1 ஸ்பூன் அளவு எடுத்து 100 மி.லி தண்ணீர் விட்டு கொதிக்கவைத்து 50 மி.லியாக சுண்டக் காய்ச்சி, அதனுடன் சிறிது பனங்கற்கண்டு கலந்து அருந்தி வந்தால், நுரையீரல் பாதிப்பு நீங்கும். மூச்சுக்குழல் அடைப்பு சீராகும். கற்பூரவல்லி சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து காலை வேளையில் அருந்தி வந்தால் மூக்கில் நீர்வடிதல், சளி, இருமல், தொண்டைக் கட்டு, தொண்டைக் கம்மல் குணமாகும். கற்பூரவல்லி உடலை நோயின்றி காப்பது போல், வீட்டையும் விஷப் பூச்சிகளிலிருந்து காப்பாற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## 4 ஆண்டுகள் தடைபெறும் இலங்கை வீரர் குஷால் பெரேரா



போதை மருந்து விவகாரத்தில் சிக்கிய இலங்கை அணியின் விக்கெட் கீப்பர் குஷால் பெரேரா 4 ஆண்டுகள் தடையை எதிர்நோக்கியுள்ளார். கடந்த ஜூலை மாதம் பாக்கிஸ்தான் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்திருந்தபோது இலங்கை வீரர்களுக்கு போதைபொருள் சோதனை நடத்தப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட சோதனையில் குஷால் பெரேராவுக்கு பொசிட்டிவ் முடிவு வந்தது.

இந்த நிலையில் நியூசிலாந்தில் கிரிக்கெட் சுற்றுப்பயணத்தில் இருந்த குஷால் பெரேரா இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இதனையடுத்து தற்போது குஷால் பெரேராவுக்கு சர்வதேச கிரிக்கெட் வாரியம் 4 ஆண்டுகள் தடை விதித்துள்ளதாக இலங்கை விளையாட்டுத்துறை மந்திரி தயசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். மேலும், இந்த தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யமுடியும் என நம்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த தடை தொடர்பான சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.


## ஆதங்கத்தை கொட்டித்தீர்த்த மேற்கிந்திய தீவுகள் அணி பயிற்சியாளர்



மேற்கிந்திய தீவுகள் அணியில் பல நட்சத்திர வீரர்கள் இடம்பெறாதது தனக்கு வெறுப்பாக இருப்பதாக அந்த அணியின் பயிற்சியாளர் சிம்மன்ஸ் தெரிவித்துள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதில் ஹோபர்டில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இன்னிங்ஸ் மற்றும் 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்தது. அனுபவமில்லாத வீரர்கள் அணியில் இல்லாத காரணத்தால் தான் தோல்வியை சந்திக்க நேரிட்டது. அதே சமயம் கிறிஸ்கெய்ல், வெய்ன் பிராவோ, டேரன் சமி, ஆந்த்ரே ரஸல் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் தேசிய அணிக்கான போட்டிகளில் பங்கேற்காமல், அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக் பாஸ் டி 20 தொடரில் விளையாடி வருகின்றனர்.

இது தொடர்பாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ் கூறுகையில், "நாட்டின் கிரிக்கெட் நிலைமையை பார்க்கும்போது மனது வலிக்கிறது. பிக் பாஷ் தொடரில் ரஸல் 140கி.மீ. வேகத்தில் பந்து வீசுவதையும், பிராவோ, கிறிஸ்கெய்ல் சிக்சர்கள் விளாசுவதையும் பார்க்க சுவாரஸ்யமாக உள்ளது. ஆனால் நாங்கள் டெஸ்ட் தொடரில் விளையாடி வரும்போது அவர்கள் அணியில் இல்லாதது வெறுப்பாக உள்ளது. நிர்வாகமும், உயர் பதவியில் இருப்பவர்களும் இதற்கு தீர்வு காணவேண்டும். இதுதான் முன்னணி வீரர்களை களத்திற்குக்கொண்டு வருவதற்கு சிறந்த வழி. மேலும், வீரர்கள், வாரிய உறுப்பினர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோருக்கு இடையேயான உறவு வலிமையானதாக இருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

## அதிரடி காட்டும் போதும் ஓய்வு பெறுவது ஏன்? – மெக்கல்லம்



நியூசிலாந்து அணித்தலைவர் மெக்கல்லம் அவுஸ்திலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெற முடிவு செய்துள்ளார். இலங்கை அணி தற்போது நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் 2வது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியது. அப்போது பேசிய நியூசிலாந்து அணித்தலைவர் மெக்கல்லம், தான் அடுத்த வருடம் பெப்ரவரியில் நடக்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரோடு ஓய்வுபெற உள்ளதாக அறிவித்தார். இது பற்றி மெக்கல்லம் கூறுகையில், "அடுத்த ஆண்டு பெப்ரவரில் சொந்த மண்ணில் நடக்க உள்ள டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவை சந்திக்கிறோம்.

இந்த தொடரின் கடைசி மற்றும் 2வது போட்டியுடன் நான் சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெறுகிறேன். டி20 உலகக்கிண்ணப் போட்டிக்கு முன்னதாக விடைபெறவிருக்கிறேன். நான் முதுகுப்பகுதி காயத்தால் அடிக்கடி அவதிப்படுகிறேன். எனது குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுடன் நேரத்தை செலவிட வேண்டும். இதற்காக நான் ஓய்வு பெறவுள்ளேன். நான் தற்போது கிறை ஸ்ட்சச்சில் தான் வசிக்கிறேன். இங்கு நடக்கும் டெஸ்ட் போட்டியில் கடைசியாக விளையாடுவது மிகவும் அழகானது" என்று கூறியுள்ளார்.

## சென்னை அணியை வாங்கினார் விஜயகாந்த் மகன்



தேமுதிக தலைவரான நடிகர் விஜயகாந்தின் மூத்த மகனான விஜயபிரபாகரன் சென்னை பேட்மிண்டன் அணியை வாங்கியுள்ளார். சிறு வயதிலிருந்தே விளையாட்டின் மீது ஆர்வம் கொண்டிருந்ததால் சென்னை பேட்மிண்டன் அணியை அவர் வாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த அணிக்கு 'சென்னை ஸ்மாஷர்ஸ்' என்று பெயரிட்டுள்ளார். இந்த அணியின் அறிமுக விழா சென்னையில் நடந்தது. இதில் பேசிய விஜயபிரபாகரன், அணியில் அதிக அளவில் இளம் வீரர்கள் உள்ளனர். குறிப்பாக இந்தியாவுக்காக விளையாடிய பி.வி. சிந்து சென்னை அணியில் இருப்பது எங்களது பலம். மேலும், சிக்கிரெட்டி, ஜெர்ரிசோப்ரா கிருஷ்ணபிரியா ஆகிய இந்திய வீரர்களும், மீதம் உள்ள ஆறு வீரர்கள் சர்வதேச வீரர்கள் என்றும் கூறியுள்ளார்.

சென்னை அணியில் லோகோ பற்றி அவர் கூறுகையில், "நான் சென்னை ஐபிஎல் அணியின் ரசிகர். ஐபிஎல் அணியான சூப்பர் கிங்ஸ் ஆக இருந்தாலும் சரி, சென்னையின் எப்.சி கால்பந்து அணியானாலும் சரி ஒரு ஆக்ரோஷம் இருக்கும். அதன்படி லோகோவில் சிங்க முகத்தை வைத்துள்ளோம். அதேபோல் ஐபிஎல் அணிக்கு விசில் போடு, கால்பந்து அணிக்கு சுத்திப் போடு என முழக்கம் போடுவது போன்று, எங்கள் அணிக்கு 'ஸ்மாஷர்ஸ் போடு' என வைத்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார். இந்த விழாவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஜெர்சி போன்று மஞ்சள் நிறத்திலான ஜெர்சியை அறிமுகப்படுத்தினர்.

## இலங்கையில் முதலீடு செய்கிறார் ஹர்பஜன் சிங்



இந்திய சுழற்பந்து வீச்சாளர் இலங்கையில் முதலீடு செய்ய உள்ளதாக இலங்கை நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஹர்பஜன் சிங், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அவரது அலுவலகத்தில் சந்தித்து இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பாகப் பேசியுள்ளார். இது தொடர்பாக நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இடையில் நீண்டகாலமாக நீடித்து வரும் நட்புறவுகளின் அடிப்படையில் ஹர்பஜன் சிங் இலங்கையில் முதலீடு செய்ய விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் பாராளுமன்றத்தில் 2016ம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய கருணாநாயக்க, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதாக தெரிவித்திருந்தார்.

## 2015ம் ஆண்டின் சிறந்த வீரராக அவுஸ்திரேலிய அணித்தலைவர்



நடப்பு ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் (ஐசிசி) விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் சுமித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒருநாள் போட்டியின் சிறந்த வீரர் விருதை தென் ஆபிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்சும், டி20 போட்டிக்கான சிறந்த வீரர் விருது டுபிளசியும் தட்டிச்சென்றுள்ளனர்.

விருதுகள் பட்டியல் விவரம்:-

1) நடப்பு ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருது: ஸ்டீவ் சுமித் (அவுஸ்திரேலியா)
2) ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர்: டி வில்லியர்ஸ் (தென் ஆபிரிக்கா)
3) டி20 போட்டிக்கான சிறந்த வீரர்: டு பிளிஸ்சிஸ் (தென் ஆபிரிக்கா)
4) ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர் (பெண்கள்): மெக் லன்னிங் (அவுஸ்திரேலியா)
5) டி20 போட்டிக்கான சிறந்த வீரர் (பெண்கள்): ஸ்டபனி டெய்லர் (மேற்கிந்திய தீவுகள்)
6) வளர்ந்து வரும் சிறந்த வீரர் விருது: ஜோஸ் ஹாஸ்ல்வுட் (அவுஸ்திரேலியா)
7) கிரிக்கெட்டின் சிறந்த உற்சாக வீரர்: பிரண்டன் மெக்கல்லம் (நியூசிலாந்து)
8) கூடுதல் மற்றும் இணைப்பு வீரர் விருது: குர்ரம் கான் (ஐக்கிய அரபு எமிரேட்)
9) சிறந்த நடுவருக்கான விருது: ரிச்சர்ட் கெட்டல்போரோப் (இங்கிலாந்து)

## உலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சானியா– ஹிங்கிஸ் ஜோடி



சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் (ஐ.டி.எப்.) ஒவ்வொரு ஆண்டும் டென்னிசில் சிறப்பாக செயற்படும் வீரர், வீராங்கனைகளுக்கு உலக டென்னிஸ் சாம்பியன் விருதுகளை வழங்கி வருகிறது. இந்த ஆண்டில் மகளிர் ஒற்றையரில் அமெரிக்க 'நம்பர் வன்' நட்சத்திரம் செரீனா வில்லியம்ஸ் உலக சம்பியன் விருதுக்கு தெரிவாகியுள்ளார். இது இவருக்கு வழங்கப்படுவது 6வது முறையாகும்.

அதேபோல் ஆடவர் ஒற்றையரில் இந்த சீசனில் 3 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற 'நம்பர் வன்' வீரர் நோவக் ஜோகோவிச் தொடர்ந்து 5வது முறையாக உலக சம்பியன் விருதைப் பெறவுள்ளார். மேலும், மகளிர் இரட்டையரில் 'நம்பர் வன்' கூட்டணியான இந்தியாவின் சானியா மிர்சா–சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா, ஹிங்கிஸ் ஜோடி இரட்டையர் உலக சம்பியன் விருதை தட்டிச் சென்றுள்ளது. பாரீசில் நடக்கும் பிரெஞ்ச் ஓபன் டென்னிசின் போது இந்த ஐ.டி.எப். உலக சம்பியன் விருதுகள் வழங்கப்படும்.

## ஜாமினில் வெளிவந்தார் எலானோ

சென்னை எப்.சி கால்பந்து அணியின் அணித்தலைவரான எலானோ ப்ளூமர் ஜாமினில் விடுவிக்கப்பட்டுள்ளார். கோவாவில் உள்ள படோர்டாவில் கடந்த 20ம் திகதி இரண்டாவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து திருவிழாவின் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் கோவாவை வீழ்த்தி சென்னை அணி சம்பியன் பட்டம் வென்றது.

அந்த அணியின் தலைவர் எலானோ ப்ளூமர் வெற்றிக் கிண்ணத்தை ஏந்தியபடி சக வீரர்களுடன் மைதானத்தை வலம்வந்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிலையில், போட்டிக்குப் பிறகு நடந்த கொண்டாட்டத்தின் போது கோவா அணியின் உரிமையாளர் தத்தராஜ் சல்கான்கரை அவமதித்தது மற்றும் தாக்கியதற்காக எலானோ ப்ளூமரை கோவா பொலிசார் அதிரடியாக கைது செய்தனர்.

இதனையடுத்து சென்னை அணியினர் மற்றும் தொடரின் ஒருங்கிணைப்பாளர்கள் உதவியுடன் கூடுதல் அமர்வு நீதிபதி வின்சென்ட் செல்வா எலானோவுக்கு ஜாமின் வழங்கினார், இதனையடுத்து தனது சொந்த நாடான பிரேசிலுக்கு செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதற்கிடையே கோவா அணியினரின் செயற்பாடுகள் வருத்தம் தருவதாகவும், எலானோ நடவடிக்கை குறித்து விசாரிக்கப்படும் எனவும் ஐ.எஸ்.எல் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## உலகின் மிகப் பிரபலமான தலைவர் "ஒபாமா"



உலகின் மிகப்பிரபலமான தலைவர்கள் பட்டியலில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முதலிடத்தில் உள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த ஒ.ஆர்.பி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு உலகளவில் 65 நாடுகளில் கருத்துக்கணிப்பு நடத்தியது. இதில் அமெரிக்க அதிபரான பராக் ஒபாமா முதலிடம் பிடித்துள்ளார். இவருக்கு ஆதரவாக 59 சதவிகிதம் பேரும், விரும்பவில்லை என 29 சதவிகிதம் பேரும் வாக்களித்துள்ளனர்.

இவரைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் ஜேர்மன் சான்சலரான ஏஞ்சலா மெர்க்கல், மூன்றாம் இடத்தில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், நான்காம் இடத்தில் பிரான்ஸ் அதிபர் ஹோலண்டே, ஐந்தாவது இடத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உள்ளனர். ஆறாவது இடத்தில் சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும், ஏழாவது இடத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, எட்டாவது இடத்தில் பிரேசில் அதிபர் தில்மா ரூசெஃப், ஒன்பதாவது இடத்தில் சவுதி மன்னர் சல்மான் பின் அப்துலாசிஸ், பத்தாவது இடத்தில் ஈரான் அதிபர் ஹஸன் ரூஹானி உள்ளனர்.

## அணு ஆயுதம் தயாரிப்போம் – விளாடிமீர் புடின்



ரஷ்யா தொடர்ந்து அணு ஆயுதம் தயாரிக்கும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவில் உள்ள தனியார் தொலைக்காட்சியில் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், உக்ரைன் அதிபராக இருந்த விக்டர் யுனோகோவிச்சுக்கு எதிராக போராட்டம் நடந்தபோது அவர் பதவி விலகினார். இதனால் உக்ரைனில் பிரச்சினை ஏற்பட்டபோது மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது புகார் கூறின. அதாவது சோவியத் யூனியனை மீண்டும் உருவாக்க முயல்வதாக குற்றம் சாட்டின, அவ்வாறு எந்தவொரு எண்ணமும் ரஷ்யாவுக்கு இல்லை.

ஆனால் இதனை யாரும் நம்ப தயாராக இல்லை, ரஷ்யா தொடர்ந்து அணு ஆயுதம் தயாரிக்கும், ஆனால் ஒருபோதும் அதனை பயன்படுத்தாது. மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளில் மேற்கத்திய நாடுகள் தலையிடுகின்றன, தாங்கள் தவறே செய்யாதவர்கள் என நினைக்கின்றன. தங்களுடைய தவறுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் காலம் வரும் போது காணாமல்போய்விடுவார்கள் என தெரிவித்துள்ளார்.

## பெரு நாட்டில் உள்ள "அவமானத்தின் சுவர்"



ஏழை மற்றும் பணக்காரர்களை பிரிக்கும் விதமாக பெரு நாட்டில் கட்டப்பட்டுள்ள சுவர் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்று பெரு. இதன் தலைநகர் லைமாவில் உள்ள சான் ஜுவான் டி மிரா..: புலோரீஸ் (san juan de miraflores) மற்றும் சுர்க்கோ(surko) பகுதிகளை பிரிக்கும் விதமாக 10 அடி உயர சுவர் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. பெருவின் பேர்லின் சுவர் என்று அழைக்கப்படும் இந்த சுவர் பணக்காரர்களையும் ஏழைகளையும் பிரிக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதாவது நாட்டின் பணக்கார பகுதிகளில் ஒன்றான லாஸ் காஸ்வரீன மற்றும் ஏழைகள் நிறைந்த விஸ்டா ஹெர்மோசாவையும் பிரிக்கும் விதமாக இந்த சுவர் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பணக்காரர்கள் வசிக்கும் பகுதியான லாஸ் காஸ்வரீனவில் உள்ள வீடுகளில் விஸ்டா ஹெர்மோசா பகுதியை சேர்ந்தவர்கள் கொள்ளை சம்பவத்தில் ஈடுபடக்கூடும் என்ற பயத்தின் காரணமாக இந்த சுவர் எழுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனிடையே இந்த செயல் சமூக ஆர்வலர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே பலரும் இந்த சுவர் எழுப்பப்பட்டதற்காக தங்களின் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக மாபெரும் பேரணியை நடத்த சமூக வலைத்தளங்களில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உலக அளவில் ஊதிய ஏற்றத்தாழ்வு அதிகமாக உள்ள நாடுகளில் லத்தின் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.


## வெடி பொருட்களை வீட்டில் பதுக்கிவைத்திருந்த பெண் கைது



பிரான்ஸில் தற்கொலை தாக்குதல் நடத்துவதற்காக வீட்டில் வெடிபொருட்களை பதுக்கிவைத்திருந்த பெண் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். பிரான்ஸின் மொண்ட்பில்லர்(Montpellier) பகுதியை சேர்ந்த கேமிலி என்பவரின் வீட்டில் பாரீஸ் தீவிரவாதி தடுப்பு பொலிசார் திடீர் சோதனை நடத்தினர். அவரது கணனியை சோதனை செய்தபோது அதில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிரச்சாரங்கள் அதிகம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் பிணையக்கைதிகளின் தலையை தீவிரவாதிகள் வெட்டும் காட்சிகளை பார்ப்பதிலும் தீவிரவாத குழுக்களின் பத்திரிகைகளை படிப்பதிலுமே அவர் அதிகளவு நேரத்தை செலவழித்ததும் தெரியவந்தது. அத்துடன் எளிதில் கண்டுபிடிக்க முடியாத வகையில் மெல்லிய இரும்பு பையில் வெடிமருந்து பொருட்களை மறைத்து வைத்திருந்ததையும் பொலிசார் கண்டுபிடித்தனர்.

மேலும் தனது நெருங்கிய நண்பர்களிடம் தனது கணவருடன் சேர்ந்து சிரியா செல்ல வேண்டும் என்றும் தியாகியாக மரணமடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பெண்கள் தற்கொலை தாக்குதல் தொடர்பான ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து கேமிலி மற்றும் அவரது கணவரையும் பொலிசார் கைது செய்தனர். தீவிரவாத தடுப்பு பொலிசார் இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.


## ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரை கைப்பற்றிய தீவிரவாதிகள்



ஆப்கானிஸ்தானில் உள்ள சங்கின் நகரை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆப்கானிஸ்தான் நாட்டை தலைமையிடமாக கொண்டு செயற்படும் தலிபான் தீவிரவாத இயக்கம் பல்வேறு நாச செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களை கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்க படையுடன் கூட்டு சேர்ந்து ஆப்கான் அரசாங்கம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில் ஹெல்மாண்ட் மாகாணத்தில் உள்ள சங்கின் நகரை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. அந்நகரில் உள்ள காவல் நிலையம் மற்றும் அரசாங்க கட்டிடத்தை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். அதே வேளையில் ராணுவத்தினரும் எதிர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக ஆப்கான் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகையில், தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும்படைகள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது. ஆனால், நகரம் முழுவதும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக தலிபானின் செய்தி தொடர்பாளர் குவாரி யூசப் அகமதி தெரிவித்துள்ளதாவது, சங்கின் நகரில் உள்ள காவல் நிலையம், அரசாங்க கட்டிடம் உள்ளிட்டவைகளை தாக்குதல் மூலம் கைப்பற்றியுள்ளோம். கடவுளின் கருணையால் நகரம் முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்று கூறியுள்ளார். மேலும் சங்கின் நகரம் முழுவதும் தலிபான் கொடி பறக்கவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அந்நகரை சேர்ந்த மக்கள் அனைவரும் வெளியேறி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## ஹிட்லர் எழுதிய சுயசரிதை – பள்ளிகளில் பாடமாக்க அனுமதி



ஜேர்மன் நாட்டின் சர்வாதிகாரியான ஹிட்லர் எழுதிய சுயசரிதை புத்தகத்தை பள்ளிகளில் மாணவர்கள் பாடமாக கற்க அந்நாட்டு அரசு அதிகாரப்பூர்வமாக அனுமதி அளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முதல் உலகப்போரில் ராணுவ வீரராக பங்கேற்று இரண்டாம் உலகப்போரில் உலகையே அதிர வைத்தார் ஜேர்மன் சர்வாதிகாரியான அடால்ஃப் ஹிட்லர். உண்மையில், இரண்டாம் உலகப்போரின் தாக்குதலால் தான் ஜேர்மனி இரண்டாக உடைந்து கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனியாக உருவெடுத்தது.

உலகம் முழுவதிலும் உள்ள யூதர்களுக்கு எதிரான கொள்கைகளை கொண்டிருந்த ஹிட்லர், தன்னுடைய பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் 'மெய்ன் கெம்ப்' (Mein Kempf) என்ற சுயசரிதை புத்தகத்தை எழுதினார். ஆனால், பல்வேறு நாடுகளில் இந்த புத்தகத்தின் கருத்துக்களால் எழுந்த சர்ச்சைகளை தொடர்ந்து பல நாடுகள் இப்புத்தகத்திற்கு தடை விதித்தன.

இந்நிலையில், மெய்ன் கெம்ப் புத்தகத்தின் 70 ஆண்டுகால பதிப்புரிமை இம்மாதத்தில் காலாவதி ஆவதால், அதனை புதுப்பித்து மறுபதிப்பு வெளியிட ஜேர்மனியில் உள்ள Munich's Institute for Contemporary History என்ற நிறுவனம் தீர்மானித்துள்ளது. முன்னதாக, ஜேர்மனியின் ஆசிரியர்கள் நல சங்கத்தினர் அரசிற்கு ஒரு கோரிக்கையை அளித்துள்ளனர்.

அதில், 'மாணவர்கள் பயங்கரவாதத்திற்கு எதிராக தங்களை தயார் படுத்திக்கொள்ளவும், ஆரோக்கியமான அரசியலை புரிந்துக்கொள்ளவும் பள்ளிகளில் ஹிட்லரின் சுயசரிதையை பாடப்புத்தகமாக வைக்கவேண்டும்' என கூறப்பட்டது.

ஆனால், இது பல்வேறு யூத அமைப்புகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. யூதர்களுக்கு எதிரான கருத்துக்களை கொண்டிருக்கும் அப்புத்தகத்தை மாணவர்கள் படிக்க அனுமதித்தால், எதிர்காலத்தில் மாணவர்களும் இனபாகுபாடு பார்க்கும் அபாயம் ஏற்படும் என அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

இருதரப்பினரின் வாதத்தைக் கேட்ட ஜேர்மனியின் கல்வி அமைச்சகம் பரபரப்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், 'நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் ஹிட்லரின் 'மெய்ன் கெம்ப்' புத்தகத்தை பாடமாக கற்க அதிகாரப்பூர்வமாக அனுமதி அளிப்பதாக' தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து இதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெறும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புதைந்த இருவர் 60 மணிநேரத்துக்குப் பின் மீட்பு



சீனாவில் நிலச்சரிவில் சிக்கிய இருவர் 60 மணிநேரத்திற்கு பிறகு உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். சீனாவில் ஷென்ஸென் நகரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலத்த நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் கட்டிட பணிகளுக்காக குவிக்கப்பட்டிருந்த மண் சரிந்ததில், 25 பெண்கள் உட்பட 76 பேர் மண்ணுக்குள் புதைந்தனர். இதனையடுத்து தீயணைப்பு படையினர், பொலிசார் உட்பட மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் தியான் ஷெமிங் (19) என்ற நபரை பொலிசார் உயிருடன் மீட்டனர். மேலும், மோசமாகக் காயமடைந்த மற்றொரு நபரும் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டார்.


நிலச்சரிவு ஏற்பட்ட நேரத்தில் அருகிலிருந்த எரிவாயுக்குழாய் வெடித்ததால் பெருமளவு சேதம் ஏற்பட்டது, மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், புதைந்தவர்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## பொருட்களை வீட்டில் டெலிவரி செய்யும் ஸ்டார்ஷிப் ரோபோ

ஸ்டார்ஷிப் ரோபோக்கள் இரண்டு மளிகைக் பைகள் சமமான பொருட்களை உள்ளூர் மையங்களில் இருந்து 5-30 நிமிடங்களில் உள்ளூரில் விநியோகம் செய்யும். ரோபோக்களின் சோதனை லண்டனில் நடைபெறுகிறது. 2016ல் அமெரிக்க சில பகுதிகளில் ஸ்டார்ஷிப் ரோபோக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும்.



## மீண்டும் பூமியில் தரையிறங்கிய ரொக்கெட்

விண்வெளி தொழில்நுட்பத்தில் புதிய மைல்கல்லாக பூமியில் இருந்து 11 தகவல்தொழில்நுட்ப செயற்கைக் கோள்களுடன் இருந்து சீறிப்பாய்ந்த ஸ்பேஸ் எக்ஸ் ஃபால்கன் 9 என்ற ரொக்கெட் செயற்கைக் கோள்களை விண்ணில் கழற்றி விட்டுவிட்டு மீண்டும் ஏவிய இடத்துக்கே வந்துசேர்ந்த வியத்தகு சாதனையை அமெரிக்காவை சேர்ந்த ரொக்கெட்களை ஏவும் தனியார் நிறுவனம் நிகழ்த்தியுள்ளது.











## அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி லண்டனில் கவனயீர்ப்புப் போராட்டம்

சிறிலங்கா சிறைகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி லண்டனில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது. கடந்த 20.12.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரித்தானிய தலைநகரான லண்டனில் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தின் முன் இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. காலை 11மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் மாலை 6 மணி வரை நடை பெற்றது. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை போர்க்கைதிகளாக அங்கீகரித்து அவர்களது பாதுகாப்பினையும் விடுதலை யினையும் வலியுறுத்தி இலங்கை அரசிடம் பிரித்தானிய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் அனைத்துலக சமூகத்திடம் கோரும் முகமாகவும் இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.



நாடு கடந்த தமிழீழ அரசாங் கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் போராட்டத்தில் மழை, குளிர் எனப் பாராது நூற்றுக்கணக்கான ஈழத்து புலம்பெயர் உறவுகள் கலந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.































இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.12.2015 அன்று வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org